# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம

தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-

வெளிநாட்டு சந்தா 15£ (30U. S $). தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115 இதழ்: 6 10-2-1989 (பெப்ரவரி 10—பெப்ரவரி 17) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


தொடர்பகத்தில் தொடக்க விழா; புதிய பிரச்சினைகளுக்கு தொடர்பகத்தின் புதிய முயற்சிகள்:

## “சவால்களைச் சந்திப்போம்”

**தொடர்பகத்தில் தொடக்கவிழா: புதிய பிரச்சனைகளுக்கு அர்த்தமுள்ள பணிகண்டு, வாழ்வுக்கு நிறைவளிக்க தொடர்பகம் எடுக்கும் புதிய முயற்சிகள். அமலமரித் தியாகிகளின் உரோமைச் செயலகத்தில் இரண்டாவது துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள அருள்திரு டானியேல் கொறேன் அ. ம. தி. அவர்கள் தொடர்பகப் பணிகளைத் தொடங்கிவைத்தார்.**

அமலமரித் தியாகிகளின் உரோமைச் செயலகத்தில் இரண்டாவது துணை முதல்வராகப் பொறுப்பேற்ற அருள்திரு. டானியேல் கொறேன், அ. ம. தி. அவர்கள் 29. 01. 1989 காலை 8. 30 மணிக்கு தொடர்பக ஆலயத்தில் தொடக்க விழாத் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து தொடர்பக விரிவுரை மண்டபத்தில் குத்து விளக்கேற்றி தொடர்பகப் பணிகளையும், தொடக்கி வைத்தார்.

நாட்டில் நடந்துவந்த போரினால் ஏற்பட்ட மனித தாக்கங்களை ஒவ்வொன்றாக அடையாளங்காட்டி, தொடர்பகத்துப் பயிற்சிப் பணிகளினாலும், தொடர் கல்வியினாலும் தொடர் மனித உருவாக்கத்தினாலும், இருண்ட நம் வாழ்வில் ஓர் அகல் விளக்காவது ஏற்றலாம் என்று அருள்திரு. சா. ம. செல்வரட்னம், அ. ம. தி. அவர்கள் தொடர்பகப் பணிகளின் தன்மையை விளக்கியுரைத்த தமது துவக்க உரையில் நம்பிக்கை யூட்டிப் பேசினார்.

657/1 மருத்துவமனை வீதியில் உள்ள தொடர்பகத்தில் பயிற்சிகள் ஆரம்பித்துவிட்டன. குறுகியகாலக் கருத்தரங்குகளும் நீண்ட காலப் பயிற்சிகளும் தொடர்பகத்தில் நடைபெறும்.

மனித வளர்ச்சிக்குத் தொடர்கல்வி அவசியம். உளவியல் கல்வியும், உளவியல் இணைந்த ஆன்மீகமும், முழுமையான- நிறைவான மனித வளர்ச்சிக்கு அடிகோலுவதாகும்.

## மடுமாதா சிறிய குருமடத் திறப்பு விழா

தை மாதம் 23ந் திகதி (திங்கள்) மன்னாரில் சிறிய குருமட மாணவர்க்கென ஒரு புதிய இல்லத்தை மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தது மிகவும் மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இப்புதிய குருமடத்தினை முதலாவது அதிபராக மன்னார் மறைவட்டக் குரு முதல்வர் அருள்திரு. சேவியர் குரூஸ் அடிகளார் பொறுப்பேற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். இவ்வைபவத்தில் மன்னார் மறைவட்டத்தில் பணிபுரிகின்ற குருக்களும், அருட் செல்விகளும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இச்சிறிய குரு மடத்திற்கு மடுமாதா சிறிய குருமடமென பெயர் சூட்டப்பட்டிருப்பதற்குக் காரணம் மருதமடு அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட மறைவட்டத்தில் இக்குருமடம் அமைந்திருப்பதனாலாகும். மேலும் இச்சிறிய குருமடத்தில் புதிதாக பதினொரு மாணவர்கள் மறைவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். மன்னார் மறைவட்ட மக்களுக்கு இப்புதிய குருமடம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

அன்றையதினம் பி. ப. 4.00 மணிக்கு ஆயர் அவர்கள் குருமட நுழைவாயிலில் குருமட அதிபராலும், குருமட மாணவர்களாலும் வரவேற்கப்பட்டதின் பின், புதிய இல்லத்தை ஆயர் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக நாடாவை, வெட்டித் திறந்து வைத்தார்கள். அதன்பின் மருதமடு அன்னையின் திருச்சுரூபத்தை ஆசீர்வதித்தார். சிறிய குருமட மாணவர்களும், பொதுநிலையினரும் சேர்ந்து ஒரு சிறிய வழிபாட்டை நடத்தி இறையாசிரை வேண்டி நின்றனர். அதனைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் இல்லத்தை ஆசீர்வதித்தார். ஈற்றில் அழைப்பினை ஏற்று அங்கு வந்திருந்த அனைவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டதுடன் இவ்வைபவம் எளிமையான முறையில் நிறைவெய்தியது.

## இதயபூர்வமான நன்கொடை

அன்னை திரேசா ஜனவரி 9 ம் திகதியன்று ஒருவைத்தியசாலையைத் திறந்து வைக்கும்போது தாம் நோபல் பரிசைவிட மேலாக மதித்த ஒரு நன்கொடையைப் பற்றி எடுத்துக்கூறி கேட்போரின் உள்ளத்தை உருகச் செய்தார்.

இந்த நன்கொடை, அன்னையின் பணிக்காக ஒரு பிச்சைக்காரன் அளித்த பத்துசத நாணயமாகும்.

அன்னை திரேசாவுக்கு இது சங்கடமாயிருந்தது. ‘‘அதை நான் வாங்கினால் அவனுக்கு ஒரு வேளை உணவு கிடைக்காமற் போகும். அதை நான் வாங்காவிட்டால் அவனது உள்ளம் வருந்தும். எனவே அவனது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அந்த பத்து சதத்தைப் பெற்றுக்கொண்டேன். அவனது முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சி எனக்கு நோபல் பரிசைவிடப் பெரிதாகப்பட்டது’’ என்று அவர் கூறினார்.

## கிறிஸ்தவ ஒன்றுகூடல்

(வாசகர்களுக்கு ஒரு விளக்கம்)

3-2-89 பாதுகாவலனில் மேற்படி தலைப்பில் வெளிவந்த அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரின் சிந்தனைகளில்:

★ ‘‘முக்கிய திருவிழாக்களான கிறிஸ்துவின் பிறப்பு, உயிர்ப்பு, பரிசுத்த ஆவியின் தினம் போன்றவற்றிற்கு சபைகள் ஒன்றுகூடி பொதுவழிபாடு, பொதுஇடங்களில் நடத்தலாம்’’ என்ற பந்தி வாசகரிடையே சில தவறான கருத்துக்களை ஏற்படுத்தி இருக்கலாம். சிந்தனையாளர் எதைக் கருதினாரென்றால், கத்தோலிக்கராகிய நாங்கள் எங்கள் ஆலய வழிபாடுகளோடு, மேற்கூறப்பட்ட தினங்களில் எமது பிரிந்த சபையினரோடு இணைந்து கிறிஸ்தவ கலை கலாசார நிகழ்ச்சிகள், செப வழிபாடு (Para Liturgy) போன்றவற்றை ஒழுங்குசெய்து கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு அயல் மதத்தவர் மத்தியில் சான்று பகரலாம் என்பதாகும்.

## வறியோருக்கு வீடுகள்

மதுரை அதிமேற்றிராசனத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் டிசம்பர் 28 ஆம் திகதி தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றன. ஏழைகளின் நலனுக்கான மூன்று திட்டங்களுக்கு அத்திவாரக்கல் நாட்டியது இவ்விழாவின் சிறப்பம்சமாக அமைந்தது.

அன்னை திரேசா ஆர்மோனியாவுக்குச் சென்றிருந்ததால், ஆயர் செல்வநாதர் வீடற்றோருக்கு 500 வீடுகள் அமைப்பதற்கு அத்திவாரக்கல் நாட்டினார். யூபிலி ஞாபகார்த்த வைத்திய சாலைக்கு கருதினால் லூர்துசாமி அடிக்கல் நாட்டினார். ஆயர் திரவியம் செவிப்புலனற்றோர் பாடசாலைக்கு அடிக்கல் நாட்டினார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய கருதினால் லூர்துசாமி மதுரை மறைமாவட்டம் ஏழைகளுக்காக மேற்கொள்ளும் இத்திட்டங்களைப் பாராட்டினார். மதுரை மறைமாவட்டத்தின் முதல் ஆயர் லியனாட் அடுத்து ஆயரான ஆயர் ஜஸ்டின் திரவியம் அகியோரின் பணிகளை அவர் பெரிதும் புகழ்ந்தார். இவ்விருவரது காலத்தில் 107 சிறிய ஆலயங்களும் 38 பெரிய ஆலயங்களும் கட்டப்பட்டன.

மயிலாப்பூர் ஆயர் கஸிமிர் ஞானதிக்கம் விழா மலரை வெளியிட்டார். மதுரை மறைமாவட்டத்தின் வரலாற்றைக் கூறும் ‘விலையேறப்பெற்ற முத்து’’ என்னும் நூல் பிதா அருளப்பரால் வெளியிடப்பட்டது.

## பத்தாண்டு நிறைவு விழா

யாழ்/ மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கச் செயற்குழுக் கூட்டம் 04-02-1989ஆம் நாள் சங்கப் பணிமனையிற் கூடிக் கீழ்வருஞ் செயற்பாடுகளை நடப்பாண்டிற் செய்வதென முடிவெடுத்தது.

1. சங்கப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை 1989ஆம் ஆண்டு மூன்றாந் தவணையிற் சிறப்பாகக் கொண்டாடுவது.
2. விழாவிற்கு முன்னோடியாக ‘வேதாகம வாய்மொழிப் போட்டி’யை இரண்டாந் தவணையில் ஆண்டு—4, 5; ஆண்டு 6, 7, 8;—ஆண்டு 9, 10; ஆண்டு—11, 12, என நான்கு பிரிவாக நடாத்துவது.
3. விழாவிற், கிளைகள் பங்கு கொள்ளும் ‘கலைநிகழ்ச்சிகளை’ இடம்பெறச் செய்வது.
4. விழாவில் சிறப்புமலர்’ வெளியிடுவது

மலரில் தாய்ச் சங்கத்தினதும், ஒவ்வொரு கிளைகளினதும் பத்தாண்டுச் செயற்பாட்டின் சுருக்கத்தினையும் கிளை நிருவாகிகளினது புகைப்படப் பிரதிகளையும் பிரசுரிப்பது.

5. கிளைகளைத் தரிசித்து ஊக்குவிப்பது.
6. ‘பசாம்’ வாசித்தற் போட்டியை 1990-ம் ஆண்டில் நடாத்துவது.

## மறைக்கல்வி கற்பிக்கத் தடை

கேரள அரசு தனியார் பாடசாலைகளுக்கு எதிராக மற்றொரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. பாடசாலைகளில் மறைக்கல்வி கற்பிக்கக்கூடாது என்பதே அது.

இதுவரை தனியார் பாடசாலைகளில் மறைக்கல்வி கற்பிக்க கேரளத்தின் கல்விச்சட்டங்கள் இடமளித்துள்ளன. ‘‘யாராகிலும் அவ்வகுப்புகளுக்கு வரும்படி வற்புறுத்தலாகாது. அவ்வகுப்புகள் பாடசாலையின் ஏனைய பாடநேரங்களைப் பாதிக்கலாகாது’’ என அச்சட்டம் விதிக்கின்றது. இதுவரை தனியார் பாடசாலைகள் மறைக்கல்வி வகுப்புகளைச் சேர்க்கும்பொருட்டுபாடசாலை நேரத்தை நீடித்துள்ளன.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# நோக்கம் என்ன?

இறைவன் எமக்கு அளித்துள்ள வாழ் நாளில் மற்றொரு தவக்காலம் வந்துள்ளது. எனவே நமக்குச் சில கடமைகள் உள்ளன என நாம் எண்ணுகின்றோம். வருடந்தோறும் நாம் அவற்றைக் கடைப்பிடித்தும் வருகிறோம்.

விபூதிப்புதனன்று திருப்பலிக்குப் போனோம். அன்று ஒருசந்தி, மாமிசத் தவிர்ப்பு அனுசரித்தோம். வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை செய்தால் நல்லது. பரிசுத்த வாரக்கடமைகள்—வழக்கங்கள் உள. தொடர்ந்து உயிர்ப்பு ஞாயிறு கொண்டாடுவோம். அதன் பிறகு …… என்றும் உள்ளபடியே நாம் இருப்போம்.

'எமது கடவுள்கள்' யாவரும் யாதொரு பேதமுமின்றி எம்முடனேயே இருக்கின்றனர்! தனிப்பட்ட முறையில் எமது உள்ளத்திலும் மனப்பாங்கிலும் நான் பழைய ஆளாகவே இருக்கிறேன். எனது பழக்க வழக்கங்கள் என்றும் உள்ளபடியே உள்ளன. குடும்பத்திலும் அயலிலும், எமது வாழ்வோடு ஒட்டிய எல்லாச் சூழல்களிலும் பழைய விருப்பு-வெறுப்புகளில் மாற்றம் எதுவுமே இல்லை. இப்படி எத்தனையோ தவக்காலங்களைக் கண்டு கழித்து விட்டவர்களாய் நாம் இருக்கின்றோம்.

ஒற்றுமை, அமைதி, ஒழுங்கு, சமாதானம் எம்மிடையே நிலவவேண்டும் என ஆசிக்கின்றோம். கிறிஸ்துவின் இறையரசு வலுவுடன் நிலைபெறவேண்டும் என்பதில் எம்மிடையே அபிப்பிராயபேதம் கிடையாது. இதற்கு எம் ஒவ்வொருவருடையவும் பதிலும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் என்ன? முதல் முக்கியமான விடயம் நமது மனமாற்றமே.

ஜீவ-மரணப் போராட்டமான காலச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அனைவருமே, தொடங்கியுள்ள இத்தவக்காலத்தில் மனமாற்றம் பெற வேண்டும். தவக்காலத்தின் மேற்கூறிய சிறப்பு முயற்சிகள் யாவுமே இந்த அடிப்படையான விடயத்துக்கு நம்மை வழி நடத்த உதவியான அகம்-புறம் சார்ந்த முயற்சிகளே என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளுதல் அவசியம். கிறிஸ்துவுக்கும் மேலாக நாம் எம் அந்தரங்கத்தில் வைத்துப் போற்றும் 'எமது கடவுள்கள்' யாவரையுமே நாம் கைவிட்டுவிட பெரிய புரட்சியும் போராட்டமும் நடத்துவோம்.

தேனருவி:

தபக்காலம் 2ஆம் ஞாயிறு (19—02—89)

# கலங்காதே என் நெஞ்சமே

வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகளில் ஈடுபடமுன் மனதில் ஓர் அங்கலாய்ப்பு. தொழில், திருமணம், வெளிநாட்டுப்பயணம், வியாபார முதலீடு, கொடுக்கல்—வாங்கல் என்றதும்; என்ன நடக்குமோ? தோல்வியோ! வெற்றியோ? என்ற ஒரு பதட்டம். நிச்சயமற்ற எதிர்காலத்திற்குள் குதிக்குமுன் இயற்கையாகவே எம்மிடம் ஒரு பய உணர்வு எழுகிறது. இதை மேற்கொள்ள நாம் என்ன செய்கிறோம், எங்கு போகிறோம் என்று எம்மையே கேட்டுக் கொள்வோம். ''ஆழமறியாமல் காலை விடாதே'' என்பது ஓர் அனுபவ மொழி. நிதானமாகச் செயல்படவேண்டியவர் நாம்.

எம்மில் பலர் சோதிடர்களிடம் போகிறோம். சில ''ஐயர்களும்'', ''ஆமத்துறுக்களும்'' எம் பயத்திற்குத் தீனி போடுபவர்கள்தான். சோதிடர்கள் எமது எதிர்காலம் பற்றித் தீர்க்கதரிசனம் கூறுவார்கள் என்பது எமது எண்ணம். இந்தச் சோதிடர்கள் தங்கள் வாழ்க்கையில் படும் அங்கலாய்ப்பை யாரிடம் கூறுவார்களோ...? கோவில், கோவில் என்று ஓடி ஓடி வரும் பழுத்த பக்தர்களும்கூட இரகசியமாய் சோதிடம் பார்க்கச் சோதிக்கப் படுகிறார்கள்.

எம் முதுபெரும் தலைவர் ஆபிரகாமும் வளமோடு வாழ விரும்பினார். புதிய நாட்டையும், பெரிய சந்ததியையும், வளமையையும் அவருக்கு உரிமையாக்குவார் என்று இறைவன் கூறினும், இயற்கையாக எழும் சந்தேகக் கீதங்கள் அவர் நெற்றியிலும் தோன்றின. இறைவனிடமே சென்று அவரிடமே தெளிவு கேட்கிறார்.

''விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானார்'' என்று புனித யாகப்பர் ஆபிரகாமின் தளராத விசுவாசத்தைப் பாராட்டுகிறார்.

தன் தாய்நாடு வானகமே என்ற நம்பிக்கை நிறைந்த தூர நோக்கோடு வாழ்ந்த சின்னப்பரும், ஆற்றல்மிக்க ஆண்டவருக்குள் நிலைத்திருக்குமபடி பிலிப்பி நகரில் வாழ்ந்த தம் மக்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்.

இயேசுவும் தபோர் மலையில் மறுரூபமாகிய மகிமையின் காட்சி அவர் நடக்க இருந்த கடினமான பாதைக்குக் கலங்கரை விளக்காக அமைந்தது.

பழைய ஏற்பாட்டு வரலாற்றில் இருபெரும் தூண்களாகத் திகழ்ந்த மோயீசனும் எலியாவும் இயேசுவின் மாட்சிமைக்கு மெருகூட்டி அவரது இறுதிப் பயணத்தின் இறுதியில் காத்திருந்த வெற்றி உண்மை என்றும் உறுதிப்படுத்தினர்.

இயேசுவின் வாழ்வின் இறுதிப் பயணத்தில் சோதனைகள் நிறைந்திருந்தன. அது கடினமாயும், கசப்பாயும் இருந்தது. ஆயினும் இறைவனின் அன்பு மகன் என்ற உறவின் நம்பிக்கை அசைக்கமுடியாத நங்கூரமாய் ஊன்றியிருந்தது.

ஆபிரகாம், சின்னப்பர் போன்றோரின் பாதையிலும் தாம் அழைக்கப்பட்டோர் என்ற மனஉறுதியும் பயணத்தின் இறுதியில் காத்திருந்த இறைவனின் வாக்குறுதியும் அவர்களைத் துணிந்து செல்லச் சக்தியளித்தது.

நாமும் இறைவனின் பிள்ளைகள்தானே. அவர் அன்புக்கும், தேர்வுக்கும் உரிமை கொண்டவர். சஞ்சலம் எதற்கு? தயக்கம் ஏனோ? சோதிடக்காரரும், மூட நம்பிக்கைகளும், எண், ரேகை, பல்லி, கிளி — இவையல்ல எம் வாழ்வுக்கு வழி காட்டுபவை. இவை எம் பார்வையை மங்கவைத்து, மனத்தை இன்னும் குழப்பும். இறைவனையும், அவரது நன்மைத்தனத்தையும் எம் தாயகமாகக் கொண்டு நம்பிக்கையுள்ள தூரப் பார்வையுடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

சுவாமி ஜீவாபோல், அ.ம.தி.

ஆதி. 15: 5 — 18 ஆபிரகாம் கடவுளையே விசுவசித்தார்.
பிலி. 3: 17 — 4: 1 நமக்கோ வானகமே தாய்நாடு.
லூக். 9: 28 — 36 இவரே என் அன்பார்ந்த மகன்.

## கலைநிலா

# சினிமா பற்றிய ஒரு கருத்து

(சென்றவாரத் தொடர்ச்சி)

திரைப்படம் ஒரு கட்புலச் சாதனம். இதன் முக்கிய கருவியே 'கமெரா' எனலாம். ''ஓவியம் என்பது வர்ணத்தால் காவியம் செய்வது'' என்றார் ஒருபிரபல ஓவியர். அதேபோல் 'கமெரா' வால் காவியம் செய் …

இத்திரைப்படங்களில் மலிந்திருக்கும் பொழுது உண்மையான வாழ்வின் பிரதிபலிப்பை இங்கு எவ்விதம் காணமுடியும். இவ்வாறு திரைப்படங்கள் மக்கள் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற நிலைமாறி, …

… பது. அவனுடைய ஆன்ம வளர்ச்சியைச் சார்ந்தது என நான் நம்புகிறேன்'' என்கின்றார் அந்தராய தார்கோவஸ்கி என்ற ரஷ்ய நெறியாளர். உண்மை இதுதான். எமது அழகியல் விழுமியங்கள் நிறைந்த பண்பட்ட மனம் இன்றைய தமிழ்த்திரைப்படங்களிலிருந்து வரண்டு போய்விட்டது.

இன்றைய திரைப்படங்களினால் மக்கள் தம் கலாசாரத் தொடர்புகளில் வேரறுப்போய் நிலைகுலைந்து போய் விடுகின்றார்கள். இதனால் மக்கள் …

கொள்ளுதல் அவசியம். கிறிஸ்துவுக்கும் மேலாக நாம் எம் அந்தரங்கத்தில் வைத்துப் போற்றும் 'எமது கடவுள்கள்' யாவரையுமே நாம் கைவிட்டுவிட பெரிய புரட்சியும் போராட்டமும் நடத்துவோம்.

எம்மில் பலர் மற்றவர்கள் மனமாற்றம் பெறுவதையே எதிர்பார்க்கிறோம். நமது மனச்சான்றை எப்படியோ சமாளித்துக்கொண்டு, நாம் மாற்றமின்றி பழைய ஆளாகவே இருப்பதற்கு சாதகமான காரணங்களைக் கற்பித்துக்கொண்டு, நமக்கு 'பாஸ்மாக்ஸ்' நாமே வழங்கிக்கொண்டு, மற்றவர்கள்தாம் திருத்தம் பெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதனை விடுத்து நாம் அனைவருமே ஒன்றிணைந்து மனமாற்றம் பெறுவோம்.

அதன் பிறகு என்ன செய்யத் திட்டமிட்டு எங்கே போகிறோம் என்று சீரிய பாதையில் சிந்தித்துச் செயற்படுவோம். இருக்கிற வீட்டை இடிப்பது மட்டும் போதாது; புதிய வீடு எப்படி அமையவேண்டும் என்பதற்கும் எம்மிடம் திட்டம் வேண்டும். வீடும் நாடும் நாளை எப்படி அமையவேண்டும் என்பதற்கும், எமது ஆட்சிமுறைகளில் நாம் எதிர்பார்க்கும் மாற்றங்கள் என்ன என்பதை ஒன்றுபட்டுத் தீர்மானிப்பதற்கும் கூட இந்தப்பொதுவான மனமாற்றம் மிகவும் உபயோகப்படும்,

22-2-85 அன்று வெளியான 'எம்கருத்து' இன்று மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது'

திரைப்படம் ஒரு கட்புலச் சாதனம். இதன் முக்கிய கருவியே 'கமெரா' எனலாம், ''ஓவியம் என்பது வர்ணத்தால் காவியம் செய்வது'' என்றார் ஒருபிரபல ஓவியர். அதேபோல் 'கமெரா' வால் காவியம் செய்தலே திரைப்படமாகும். கமெராவில் கோணம், 'லோங் சொட்', குலோசப்' எனப்பல பரிமாணங்கள் உண்டு நல்ல கலைப்படைப்புக்களில் இவைகளின் மூலம் ஒரு காவிய உணர்வையே எழுப்பமுடியும். "ஒரு நல்ல திரைப்படம்தன் 'குளோசப்' புக்கள் மூலமாக நம் பண்பட்ட வாழ்க்கையின் பல தெரியாத விடயங்களை நமக்குக் காட்டுகிறது. இசைக் கலைஞன் இசைக்குறியீடுகளைப் படிப்பது போல் வாழ்க்கையின் மிக நுணுக்கமான காட்சிகளைப் பார்ப்பதற்கு இது கற்றுத்தருகிறது'' என்கிறார் பொலப் பிலாஸ் என்னும் கங்கேரியர். ஒரு நெறியாளரின் கவிதை உணர்வைக் காட்டுவதே த்தகைய முறைகள் தான். ஆனால் நமது பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்களில் ஆபாச உணர்வினை எழுப்பவே பயன்படுகின்றது.

இவ்வாறு எதிலும் உண்மைத் தன்மையற்ற போலிகள் திருக்கும் பொழுது உண்மையான வாழ்வின் பிரதிபலிப்பை இங்கு எவ்விதம் காணமுடியும. இவ்வாறு திரைப்படங்கள் மக்கள் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற நிலைமாறி, திரைப்பட வாழ்க்கைமுறைக்கு ஏற்ப மக்கள் தம்மை மாற்றிக் கொள்ளும் நிலைவந்து கொண்டிருக்கிறது.

இக்குறைபாடுகள் பற்றி தயாரிப்பாளரிடம் முறையிடும் பொழுது அவர்கள் கூறும் பதில் ஒன்றுதான்: ''மக்கள் விரும்புவதை நாம் அவர்களுக்கு அளிக்கிறோம்''. ஆனால் மக்கள் ரசனை என்ற திரைக்குள் தங்கள் லாப ஆசைகளை இவர்கள் மிகத் தந்திரமாக மறைத்துக்கொண்டு விட்டார்கள். மேலும் மக்கள் ரசனையைக் கீழிறக்கியவர்களும் இவர்கள்தான், ''கலையை ரசிக்க மிகக்குறைவான விடயங்களே போதும், மென்மையான, நுண்ணுணர்வுள்ள, வசியப்படக் கூடிய ஆன்மா, நன்மைக்கும் அழகிற்கும் திறந்து வைக்கப்படும் மனம், உடனடியான அழகியல் அனுபவத்திற்கு தகுதியாக இருத்தல் இவை போதும். கலை உணர்வு ஒருவனுக்கு பிறவியிலேயே வாய்ப்

இன்றைய திரைப்படங்களினால மககள தம கலாசார தொடர்புகளில வேரறுப் போய் நிலைகுலைந்து போய் விடுகிறார்கள. இதனால் மக்கள் ரசனை உணர்வு கீழிறக்கப்படுகின்றது; மனம் பண்பழிந்து போகிறது. பண்பழிந்தவனால் இந்த உலகில் மனிதனாகவே நடமாடமுடியாமல அவன விலங்கு நிலைககுப் போயவிடுவான. எனவே இன்றைய பெரும்பாலான தரைப்படங்கள் மனித சமூகத்திற்கு எதைத் தரவுள்ளது?

இவ்வாறான அழிவு கொண்ட சினிமா கலாசார சூழலிலும் சில அபூர்வமான முயற்சிகள் தமிழில் இல்லாமலும் இல்லை. ஆயினும் அவை மிக மிகச் சொற்பமானவையே 1916ம் ஆண்டு தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட ''கீசகவதம'' என்ற மௌனத் திரைப்படத்தினைத் தொடர்ந்து இன்று வரையுள்ள காலங்களினைக் கணக் கெடுத்துக் கொண்டாலும் இவை ஒரு விகிதம் கூட அல்ல.

சுதன்

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# "கலாசார வாயிலாக சிந்திக்கத் தூண்டுவோம்"

சென்ற மாதம் ஒளி விழா சிறப்புப் போட்டியில் 'கிறிஸ்துவைசந்திக்கும் கிறிஸ்தவன்" என்னும் கருவில் அமையப்பெற்ற நாடகங்கள் பங்கு மட்டத்தில் - புனித யாகப்பர் பங்கு, இளவாலை புனித அன்னம்மாள் பங்கு, சுண்டுக்குளி புனித யுவானியார் பங்கு, அமல அன்னை அன்பகம், சிறுவர் இல்லம் அரியாலை, மிருசுவில் பங்கு, நெடுந்தீவு பங்கு. பாஷையூர் புனித அந்தோனியார் பங்கு, மரியன்னை பராலய பீடப் பணிப்பாளர் சபை, சில்லாலை பங்கு நாடகக் குழுவினர் என்பன கலந்து உற்சாகப்படுத்தின.

நாடகப் போட்டியைத் தொடக்கி வைத்து உரை ஆற்றிய பொது நிலையினர் ஆணைக்குழுவின் உபதலைவரும் மன்னார் மாவட்ட மேலதிக, அரசாங்க அதிபருமாகிய திரு. செபநாயகம் அவர்கள் உரையாற்றுகையில் "ஞானமுழுக்கினால் திருச்சபையில் இணைக்கப்பட்ட பொது நிலையினர் தமது பணிகளால் இன்றைய உலகின் கிறிஸ்துவுக்கு சாட்சி பகர அழைக்கப்படுகிறர்கள். கிறிஸ்து அன்றும் தமது வாழ்க்கையில் துணைவர்களாக தமது போதனைக்கு உகந்தவர்களாக சாதாரண பொது மக்களைத்தான் பயன்படுத்தி தனது பணியினைத் தொடர்ந்தார். அவர் அன்றே பொது நிலையினரது முக்கியத்துவத்தை உணர்த்தி பணிகளைப் பகிர்ந்து நற்செய்தியை உலகறியச் செய்தார். அந்தவழியில் வந்த நாம் எமது செயல்களிலும் கிறிஸ்துவிற்கு சாட்சிகளாய் வாழத்தான் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்த்தவே கலாச்சார வாயிலாக சிந்தனைகளைத்தூண்டும் நோக்கோடு தான் இப்போட்டிகளும் நடைபெறுகின்றன. இவைபோன்ற கலைகலாச்சார வாயிலாக மக்கள் மத்தியில் தங்கள் திறமைகளையும் வெளிக் கொணர்வதோடுபணிகளை ஏற்றுக்கிறிஸ்துவிற்கு சாட்சி பகரும் கிறிஸ்தவர்களாக தங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த பொது நிலையினராக உணரவைக்கும் இவை போன்ற முயற்சியில் பங்கேற்ற பங்குகளை பாராட்டுவதோடு தொடரும் பணிகள் சிறக்க வேண்டும்" எனக் கூறினர்.

போட்டியின் நடுவர்களாக மறை ஆசிரியர் திரு. ம. யேசுதாசன், திரு. S. F. சௌந்தரம், நாவண்ணன், கலந்து கொண்டு தீர்ப்பை வழங்கும் போது, நடுவர்கள் சார்பில் நாவண்ணன் உரையாற்றுகையில்,

"இன்றைய நெருக்கடிகாலத்திலும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த முன் வந்த, பொது நிலையினரது பங்கு பணிகள், ஆணைக்குழுவின் முயற்சிக்கு கிடைத்த நல் வெற்றியாகும். இவை போன்ற பலதரப்பட்ட கலைஞர்களை நல்வழிப்படுத்தி திறமைக்கு களம் அமைத்தால் அவர்களின் கலாச்சார, கலைத்துவ, எழுத்துலக சிறப்புக்களைக் காணலாம். இவை போன்ற வளர்ச்சிக்கு ஆணைக்குழு தனது முயற்சியின் மூலம் மேலும் பல மறைந்து வாழும் திறமைசாலிகளை வெளிப்படுத்தும் ஏணிப்படியாக செயல்பட வேண்டிய அவசியம் இன்றைய நாளில், ஆணைக்குழு சிந்திக்க வேண்டிய விடயமாகும்" என்ருர்.

ஆணைக்குழுத் தலைவர் அருள் திரு. ஜெபநேசன் அடிகளார் உரையாற்றுகையில், "விழாவின் சிறப்புக்கு பொது நிலையினர் ஆற்றிய பங்கு பெரும் உற்சாகத்தைத் தந்தது. இப்படிப்பட்ட விழாக்கள் இன்றைய காலத்தின் நெருக்கடி நிலையில் நடத்த முடியும் என்று ஏங்கிய போது உங்கள் உற்சாகமான பங்களிப்புகள், எமக்கு மேலும் பணிகளைச் செய்யத் தூண்டி நிற்கிறது. விழித்து விட்ட பொது நிலையினரின் பணிகள் சிறக்க நல் வாழ்த்துக்கள்" எனக்கூறினர்.

நன்றியுரை ஆற்றிய யோசப் பாலா அவர்கள், ஊக்கம் கொண்டு உழைக்க சகல பங்குகளிலும், தொடரும் பணிகளாலும் நல்லவை நாமே செய்து, மேலும் மேலும் இவை போன்று கலைஞர்களை, எழுத்தாளர்களை, கவிஞர்களை வெளிக்கொணரவும் ஊக்குவித்து திறமைக்கு களம் அமைக்க பொது நிலையினர் ஒன்றுபட்டு செயல்படுவதோடு ஏனையவர்களையும் ஊக்குவிக்கும் உயர்ந்த பண்பால், புதிய ஆண்டில் மேலும் பல பணிகள் வாயிலாக தொடர இப்போட்டிகள் நடைபெற ஊக்குவித்த சகல பங்குக் குருக்களுக்கும், பொது நிலையினர்க்கும் நடுவர்களாக கலந்து சிறப்பித்தகலைஞர்களுக்கும், நாடக நடிகர்களுக்கும் ஆணைக்குழு சார்பில் நன்றி பகர்ந்தார்.

போட்டியில் கலந்த பங்குகளோடு பார்வையாளர்களின் உற்சாகம் நிறைந்த மண்டபம் மகிழ்ச்சியில் மிதந்தது, பரிசில்கள் வழங்கலுடன் நாடகவிழா நிறைவு பெற்றது.

பொது நிலையினரது ஆணைக்
குழு உபதலைவர்
திரு. செபநாயகம்

# தவக்காலத்தின் 1-ம் ஞாயிறு

பொருள்: பசியரல் வாடும் மக்களும் வாழ்வதற்குரியவற்றை அனுபவிக்க அவர்களுக்கு உள்ள உரிமையும்.

திருப்பலியின் முன்னுரை:

உயிர்தப்பிப் பிழைப்பதற்கு உண்ண உணவின்றித் தவிக்கும் மக்களை இத்திருப்பலி ஆரம்பமாகும் வேளையில் சிந்தித்திடுவோம். 38%-40% சத்துணவு அற்றோர் எம் மக்களில் உள்ளனர். 75 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வதால் உயிரைக் காப்பாற்றத் தேவையான உணவைப் பெற முடியாதிருக்கின்றனர். வாழும் உரிமையும் அதனுல் வாழ்வதற்குரிய அடிப்படை அத்தியாவசிய தேவைகளை அடையும் உரிமையும் இவ்வுலகில் உதித்துள்ள அனைவருக்கும் உண்டு எனவே அறநெறியின்படி தீமையானதாகவும், பாவநிலையில் உள்ளதாகவும் பசிக்கொடுமை கணிக்கப்பட்டு அதை அகற்றும் நல்ல நடத்தைக்குரிய பொறுப்பு எம்மவர்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது.

உளமாற்ற வழிபாடு:

1. குரு:- தந்தையே. உயிரை உருவாக்கியவர் நீரே, மனித மாண்புடன் ஒவ்வொருவரும் வாழ்வதற்கு அனைத்து வளங்களையும் வழங்கியவரும் நீரே நாம் வாழ்வதற்கு அவசியமானவற்றிற்கு மேலாக நமதாக்கியதால், பிறருக்குரியவற்றை அவர்களிடமிருந்து அபகரித்ததற்காக எம்மை மன்னித்தருளும். ஆண்டவரே இரக்கமாயிரும்.

மக்:- ஆண்டவரே இரக்கமாயிரும்.

2. குரு:- ஆண்டவரே நீர் எமது உடன்பிறப்பாக அவதரித்து பசியின் கொடுமையையும், பரிதவிப்பையும் அனுபவித்திரே. பசியால் வாடுவோரையும், சத்துணவின்மையால் துன்பப்படுவோரையும் புரிந்துணராததற்காக எம்மை மன்னித்தருளும் — கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

மக்:- கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

3. குரு:- வாழும் இறைவனின் தூய ஆவியே திருச்சபையின் சமூகக் கொள்கைகளை அதே அன்னை வழியாக நீர் தொடர்ந்து வழிகாட்டுகின்றீர். நம் திருத்தந்தை, நம் ஆயர்கள் வழியாக எமக்கு அளிக்கப்பட்ட உமது வார்த்தைக்கு செவிமடுக்காததற்காக எம்மை மன்னித்தருளும்—ஆண்டவரே இரக்கமாயிரும்.

மக்:- ஆண்டவரே இரக்கமாயிரும்.

விசுவாசிகளின் மன்றாட்டு:

அன்புள்ளங்களே, வாழ்விக்கும் வழிகாட்டியாக பிதா தமது திருமகனை அனுப்பினுர் அவருடைய போதனையை ஏற்று. அதனுல் எமது வாழ்வை மாற்றுவதற்கான இத்தவக்காலத்தில் நாம் பெற வேண்டுமென்று செபிப்போமாக.

வாசகர்:- காலத்தின் அறிகுறிகளை அறிந்து, அதனுல் தமது மந்தைக்கு ஊக்கமளிக்கும் தலைமைத்துவ பணியையாற்ற எமது திருத்தந்தையயும், மேய்ப்பர்களையும் வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்ருடுகின்றோம்.

எல்லோ:- ஆண்டவரே எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும்.

வாசகர்:- குறுகிய சிலரின் நலனை மட்டுமே நோக்காமல் எல்லோரினதும் நலன் கருதி புதிய திட்டங்களை உருவாக்கவும் பரவலாக்கப்பட்ட நீதிநெறியை நோக்கி எமது நாட்டின் தலைவர்கள் செயல்பட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்ருடுகின்றோம்.

எல்லோ:- ஆண்டவரே, எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும்

வாசகர்:- பசியால் வாடுவோர் மட்டிலும், சத்துணவு இன்றித் தவிப்போரிலும் நாம் அனைவரும் அதிகமான அக்கறையுடையவர்களாக வாழ வரமருள வேண்டும் என்று இறைவா உம்மை மன்ருடுகின்றோம்.

எல்லோ:- ஆண்டவரே எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும்

வாசகர்:- கடன்பட்டு சுமைகளைத்தாங்கி வாழ்வோர் தமது இன்னல்களிலிருந்து மீட்கப்படுவதற்குரிய வழிகளைக் கண்டடைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்ருடுகின்றோம்.

எல்லோ:- ஆண்டவரே எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும்

குரு: இறைவா. நாம் வாழ்வு பெறவும் அதை நிறைவாகப் பெறவும் வேண்டுமென்று உமது திருமகனை எமக்கருளினீர். உயிரென்னும் கொடையை நாம் மதிக்கவும் பிறருடன் அதைப் பகிர்ந்து வாழவும் வழிகாட்டியருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்ருடுகின்றோம்.

எல்லோ:- ஆமென்.

# நற்சமுக நடுநிலைய சமுக தலைமைத்துவப் பயிற்சி அங்குரார்ப்பணம்

எம்பகுதி மக்கள் ஒரு நற்சமூகமாக உருவாக உதவுவதேயாம். நற்சமூக நடுநிலையத்தின் பிரதான நோக்கமாகும். அடிமட்ட மக்களுக்கு யாதேனும் விதத்தில் சேவைசெய்பவர்களை மேலும் வலுவுள்ள பலன்நிறைந்த ஆழமான கருத்துக்களைக் கொண்ட பணியாளர்களாகவும். வழிகாட்டிகளாகவும் வளர்க்கும் சமூகத் தலைமைத்துவப் பயிற்சி நெறி பயிலுனர்கள், விரிவுரையாளர்கள், நிலையசேவைக் குழு உறுப்பினர்கள், ஒரு சில அன்பர்கள், மும்மதத் தலைவர்களுடன் நற்சமூக நடுநிலையத்தில் வைபவரீதியாக 88-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ந் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி அழகையா துரைராசா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முதன்மை நாயகராகவிருந்தார். முதல் நிகழ்ச்சியாக 'விளக்கேற்றுவோம்' என்ற கீதம் எல்லோராலும் இசைக்கப்பட வருகை தந்திருந்த முக்கியஸ்தர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர். அடுத்து திருமதி மா. சவிரிமுத்துவின் வரவேற்புரையும், இயக்குனரின் தலைமையுரையும் இடம்பெற்றன. ஒளியுள்ள முகப்பை அடைவோம் என்ற நம்பிக்கையுடன் ஒரு இருண்ட சுரங்கத்தூடாகச் செல்வோரைப் போலவே எம்மக்களும் இன்று இருக்கிருர்கள். எனவே மீண்டும் மக்கள் மத்தியிலே சமூகத்தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும். அடிமட்ட சேவைகளுக்கு ஊக்கமளிக்க மதங்கள்; நற்பிரசைகள், அறிவாளிகள், ஆற்றல்படைத்தோர் ஒன்றுசேர வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். இத்திசையில் செயற்பட எமக்கு உதவ முன்வந்த சகலருக்கும் குறிப்பாக விரிவுரையாளருக்கும் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து நல்லை ஆதீன முகாமையாளர் திரு. S T. நடராஜா இந்து மதத்தைத் தழுவிய ஆசியுரை வழங்கினுர்.

ஜனுப் M. I. அப்துல்றஷாக் இஸ்லாமிய ஆசியுரை வழங்கினுர். அதில் பணம் படைத்தோர், பணிசெய்வோர். அறிவாளிகளோடு சேர்ந்து, ஏழைகள் என்ற நான்கு வகுப்பாரும் மக்கள் நலனுக்காக ஒன்று சேர்ந்து பங்களிக்க வேண்டும். (இங்கு ஏழைகளின் பங்கு அவர்களின் பிரார்த்தனையே என்ருர். கிறிஸ்தவ ஆசியுரை வழங்கிய அருள் தந்தை மைக்கல்சாமி; ஒருவரை ஒருவர் மதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மனித முன்னேற்ற நடுநிலையம் சார்பாகப் பேசிய அருள்தந்தை M. E. பயஸ் நம்மை நாமே முதலில் மதிக்க வேண்டும் என்ருர். "எம்மயலவர்களில் நாம் அறியாமலே வெவ்வேறு முத்திரைகள் பதித்துள்ளோம். இவற்றை நாம் அகற்றிவிட்டு அவர்களையும் முழுமையாக ஏற்று மதித்து ஒன்றுசேர்ந்து செயல்படுவோம். எம் சூழலில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் என்னையும் தாக்குகிறது அல்லது வளர்க்கிறது என்பதை உணர்ந்தவர்களாக முழுஅக்கறையோடுசெயல்படுவோம்" என்று அழைப்பு விடுத்தார். உபவேந்தர் கலாநிதி துரைராசா தனது பேச்சில் பல இன்னல்கள் மத்தியி தமிழ் இனம் முன்னேறுகிறது. ஆகவே நாம் எல்லோரும் உதவவேண்டும். அதில் ஒரு துறை கல்வி, இதற்குப் பல்கலைக்கழகங்கள் ஒரு சாதனம். அதன் வாயில்கள் முழுநாளுமே மக்கள் தேவைகளுக்காகத் திறந்திருக்க வேண்டும். இத்திசையில் தாம் செயற்பட அனுமதிகோரியிருப்பதாகவும். வெகுவிரைவில் அதைப்பெற விருப்பதாகவும் தெரிவித்தார். 'ஊற்று' எனும் அமைப்பூடாக பலகிராமங்களை முன்னேற்றுவதிலும் அங்கு தலைவர்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார். எமது நிலையப்பயிற்சி நெறிக்கு பல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உதவ முன்வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்

தொடர்ந்து பயிலுனர்கள் ஒவ்வொருவரும் தம்மை அறிமுகம் செய்து தாம் தெரிந்தெடுக்கப்பட்டதற்காக நன்றிகளையும் தெரிவித்தனர். அதிலொருவர் அன்றைய நிகழ்ச்சிகள் சென். பிரான்சிஸ் கோவில் நடைபெற்ற சர்வமத ஒன்று கூடல் நிகழ்ச்சியின் உணர்ச்சியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார். கலாநிதி, தர்மன் சவிரிமுத்து நாம் ஒரு பயங்கரமான சூழலில்தான் இருக்கிறோம். எனினும் பயந்தொதுங்கியவர்களாகவல்ல என்றும் துணிவோடு செயற்பட அழைப்பு விடுத்தார்.

இறுதியில் பயிற்சிநெறி பதிவாளர் திரு. A. B. ஜோர்ஜ் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது

# அவள் தோற்கவில்லை

மதலேனா தனது இறுதி மணித்துளிகளை எண்ணிக்கொண்டு கிடக்கிறாள். இயல்பாகவே மெலிந்த அவளது உடம்பு பாயும் படுக்கையுமான பின்னர் படுக்கையோடு ஒட்டிவிட்டது போன்று தோன்றியது. நேற்றுத் தொடக்கம் சேடம் இழுத்துக்கொண்டேயிருக்கின்றது. ''இன்னும் சில நிமிடங்கள்... சில நிமிடங்கள்'' என்று கணக்குப்போட்டுக் கொண்டு 'ஐயோ' என்றுஒப்பாரிவைத்து அழக் காத்துக்கொண்டிருக்கும் பெண்களை அவள் ஏமாற்றிக்கொண்டே கிடக்கிறாள்... அடிக்கடி அவள் இமைகளை அகட்டி இருதிருவென தன்னைச் சூழ்ந்து நிற்பவர்களைப் பார்க்கும்போது அவர் பார்வை யாருக்காகவோ ஏங்குவதுபோலத் தெரிகின்றது. அவள் எதிர்பார்த்த அந்த உருவம் அங்கு இல்லை என்பதை உணர்ந்துகொண்டதும் சோர்வோடு அவள் இமைகள் மீண்டும் மூடிக்கொள்கின்றன.

மதலேனாவின் மகள் மிக்கேலியா அவள் பக்கத்திலேயே இருக்கின்றாள். திருமணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அவள், தன்தாய் கண்விழிக்கும்போதெல்லாம் ''என்னயயா வேணும்'' என்று கேட்கும் கேள்விகுக்கூட ''ஒன்றுமில்லை'' எனும் பதில் வெறும் தலை அசைவாகவே அவளிடமிருந்து வருகின்றது.

மூப்பர் முத்தையர் அந்த வீட்டின் தாழ்வாரத்தில் அமைந்துள்ள மண் குந்தில் பத்திக்கப்டன் சாய்ந்துகொண்டிருக்கிறார். அவர் மனம் அமைதியற்றுத் தவிக்கின்றது. எத்தனையோ பேய்பிடித்தவர்களையெல்லாம் எதிர்கொண்டு மிக்கேல் மாலை அஞ்சலியைச் சொல்லியே தன் கைப்பிரம்பால் அடித்துக் கலைத்துச் சுகமாக்கிய நெஞ்சுரம்கொண்ட அவர் மனம் இன்று கனிந்து கசிந்துஉருகிக்கொண்டிருந்தது.

மதலேனாவோடு தான் நடத்தி முடித்துவிட்ட ஐம்பது வருட இல்லறத்தை அவர் மனம் அசை போட்டுக்கொண்டது. கடந்த காலத்தை எண்ணும்போது சுழிவிரக்கத்தால் அவர் கண்கள் கலங்கிப்பெருமூச்சுத் தான் வெளியேறுகின்றது.

அவர் கோவில் மூப்பராக இருந்துகொண்டு பேய்களை மட்டும்தான்அடித்துவிரட்டினாரா? பேய்களை ஓட்டுபபோது கொடுக்கும் உக்கிரமான பிரம்படியைவிடக் கொடுமையாக மதலேனாவுக்கு அவர் எத்தனை தடவைகள் அடித்திருப்பார்? தன்சகோதரிகளுக்காகப்பார்ந்து பேசிக்கொண்டு எத்தனை சித்திரவதைகளைச் செய்திருப்பார்! அவள் தன் சகோதரர்களோடு உறவுகொள்ளவிடாது எத்தனை தடைகளை விதித்திருப்பார்? அவருடைய அதிகாரத்துள்ளும், கொடுமையுள்ளும் ஒரு ஆணையும் பெண்ணையும் பெற்றுக்கொடுத்தஅவள்இன்று பிரியப்போகின்றாள்.

இலுப்பைக்குளம், அதுசிறியதொரு குக்கிராமம். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் கிராமம். அங்கிருந்து பட்டணம் என்று பார்ப்பதானால் அப்பொழுது (60 ஆண்டுகளுக்கு முன்) வவுனியாவுக்குத் தான் வரவேண்டும். அந்த கிராமத்துக்குரிய அடைக்கல மாதா ஆலயம்கூட வவுனியா மீசாமுக்குக் கீழேதான் அப்பொழுது இருந்தது.

அடைக்கல அன்னையின் ஆலயம்கூட முதன் முதலில் கொட்டில் கோவிலாக ஆரம்பிக்கப்பட்டது மூப்பர் முத்தையாவின் தந்தையாரால்தான். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் கூட தனது ஆராய்ச்சி நூல் ஒன்றில் இந்த ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது மாந்தையில் இருந்து புலம்பெயர்ந்து வந்த மார்க்கு என்பவரால்தான் என்றுஎழுதியுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள பெருமைக்குரிய மார்க்கு இந்தமூப்பர்

# சிறுகதை

முத்தையாவின் பாட்டனார் தான்,

வவுனியாவில் இருக்கும் வேந்தக்கோன் சுவாமியாருக்கு ஆள் அனுப்பியாயிற்று. சுமார் இருபத்தைந்து மைல் தொலைவில் இருக்கும் வவுனியாவுக்கு நேற்று அதிகாலையே ஆள் அனுப்பியாயிற்று. ஆனால் சுவாமி இன்னும் வந்துசேர்நத பாடில்லை. சுவாமியை எதிர்பார்த்துத்தான் மதலேனாவின் உயிர் இன்னும் காத்து நிற்கின்றது என்பது அங்கிருந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

முதல்நாள் தொடக்கம் சோனாவாரியாகப் பொழிந்துகொண்டிருக்கும் பெருமழை வேறு. இந்த நிலையில் சுவாமி வவுனியாவில் இருந்து வருவாரோ என்பதுகூட மற்றவர்களுக்குச் சந்தேகமாகவே இருந்தது. ஆனால் சிறிது நிதாக அடங்கிக்கொண்டிருக்கும் மதலேனாவுக்குள் மட்டும் அந்த நம்பிக்கை இன்னும் அசையவில்லை. அவள் அடிக்கடி கண் திறந்து பார்க்கும்போது எல்லாய அங்கு தேடியது சுவாமியின் உருவத்தைத்தான். அவர் அவளது கண்களுக்குப்படாத ஒவ்வொரு முறையும் 'வருவார்' என்ற உறுதியுடனேயே மீண்டும்கண்களை மூடிக்கொண்டிருக்கிறாள். சுவாமி வருமுன்னர் அவளுடைய உயிர் பிரியுமானால் இத்தனை இன்னல்கள், சோதனைகளுக்கிடையில் அவள் கொண்டிருந்த விசுவாசம் பொய்த்துவிடுமல்லவா!

மதலேனாவின் பிறந்தவூர் முல்லைத்தீவு. அவள் அப்பொழுது இளம் பெண்ணாக இருந்த போது அன்றிருந்த வெள்ளைக்காரச் சுவாமி ஒன்பது முதற் சனிக்கிழமைப் பக்தியை ஒழுங்காகவும், விசுவாசத்துடனும் அனுசரித்து வாழும் ஒருவருக்கு எந்தக் காட்டினில் மரணம் ஏற்பட்டாலும் அவஸ்தைப் பூசுதல் (நோயிற் பூசுதல் அருட்சாதனம்) தேவ திரவிய அனுமானம் பெறாமல் அவள் உயிர் பிரியாது என்று சொல்லக் கேட்டிருந்தாள். அன்றே அவ்விடத்திலேயே அவள்சபதம் செய்தவள்தான். அப்பொழுது அவள் ஆரம்பித்தசனிக்கிழமை பக்தியை அவள் கைவிடவில்லை. முத்தையருக்கு வாழ்க்கைப்பட்டு இலுப்பைக்குளம் குடியேறிவிட்ட பின்னர். ஒழுங்காகப் பூசை காணக் கொடுத்துவைக்கவில்லையே தவிர அவள் படுக்கையில் விழும்வரை தனது சனிக்கிழமைப் பக்தியை அனுசரிக்க மறந்தாளில்லை.

மதலேனாளைப் பற்றியும், அவளது மாதா பக்தியைப் பற்றியும் அவள் குடும்பத்தைப் பற்றியும் வேந்தக்கோன் சுவாமியாருக்கு நன்கு தெரியும். முதல் நாள் செய்தி கிடைத்ததுமே தனது மோட்டார் வண்டியில் இலுப்பைக்குளம் நோக்கிப்புறப்பட்டார் எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியிலும் தன் விசுவாசத்தில் தளராத அந்த ஜீவனுக்குதான் ஆற்றவேண்டிய இறுதிக் கடமையைச் செய்துவிடவேடும் என்ற துடிப்பும், வேகமும் அவரிடம் இருந்தது. ஆனால் திடீரென்று தொடங்கிய பெருமழையில் அவரது மோட்டார் வண்டி இயங்க மறுத்தது என்ன கோளாறு என்றும்

**நாவண்ணன்**

தெரியவில்லை. அதனைத்திருத்துவதற்கு ஆளனுப்பி, அவன் வந்து வண்டியைச் சரிசெய்து முடிய மாலையாகிவிட்டது காட்டுப்பயணம் — பொழுது சாய்ந்ததின்பின் தொடங்க முடியாது என்பனால் அதிகாலையில் புறப்படுவதற்கு முடிவு செய்துகொண்டார்.

மதலேனாவை நினைத்துக்கொண்டார். சென்ற முறை அவர் அங்கு பூசைக்குச்சென்றிருந்தபோது கடைசியாக அவர் அவளைக்கண்டார். கோவில்மூப்பரின்மனைவிஎன்பதால் சுவாமியின் சாப்பாட்டு விஷயங்களையெல்லாம் கவனிப்பது அவளுடைய பொறுப்புத்தான். எனவே தனது உள்ளக்கிடக்கைகள், வேதனைகளை மனந்திறந்து அவள் அவரிடம் சொல்லியிருக்கிறாள். ''என்னுடைய கவலையை எல்லாம் இந்த மாதாட்டத்தான் சொல்லி அழுறன். அவ என்னைக் கெதியில எடுத்துப் போட்டா என்றால் பறவாயில்லை. என்ர குமராலதான் கவலை'' என்று அவள் கண் கலங்கிக்கூறிய அந்தக் காட்சி அவர் கண்முன்னே தோன்றியது. அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மரணம் காலிலே தைத்த வேலம் முள் காயம் ஏற்பாக்கியதன் மூலம் இப்பொழுது நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை செய்திகொண்டுவந்தவர் மூலம் அறிந்துகொண்டார், தான்சென்று அவள் ஆசையை நிறைவேற்

(7ஆம் பக்கம் பார்க்க)

# தேனருவி

தவக்காலம் 1ஆம் ஞாயிறு (12-02-89)

## சோதனைகள் சவால்களே

வசந்த காலத்தில் வாழத்துடிக்கும் எம் மனது கசந்த காலத்தில் வாழ மறுக்கிறது இலட்சிய வாழ்வில் வெற்றிவாகை சூட விரும்பும் எம் மனது அதற்கு முன்பு வரும் சவால்களைச் சந்திக்கத் தயங்குகின்றது.

பாலும் தேனும் பொழியும் வளமான நாடு வேண்டும் என்ற தாகத்தோடு புறப்பட்ட இஸ்ரவேல் இனத்தவர் அதற்குப் பாதை வனாந்தரம் என்றதும், பாதியில் சந்தேகம் கொள்ளத் தொடங்கினர். ஆயினும் ஆண்டவர் இரக்கமுற்று அவர்கள் தவற்றைப் பொறுத்துக் கொண்டார். எம் மனத்திற்கும், இஸ்ரவேல் மக்களின் மனதுக்கும் சவாலாக இயேசுவின் மனம் செயல்பட்டது. யோர்தான் நதிக் கரையில் பெற்ற அழைப்பின் இலட்சியக் கனவுகளை நனவாக்கப் புறப்பட்ட பயணப் பாதையும் ஒவ்வொரு மனித மனத்துடன் செல்லுகிற பயணப் பாதையை ஒத்ததாய் இருந்தது. ஆயினும் இயேசுவின் மனது சவால்களைக் கண்டு பின்வாங்கியதில்லை.

இயேசு சோதிக்கப்பட்டார் ஒன்றும் உண்ணாமல் இருந்த உபவாச நாட்களில் பசிக்கொடுமை இரண்டு மடங்கு. உண்ண வேண்டும் என்ற தேவையை மட்டுமல்ல, உண்ண வழியும் உண்டு என்று காட்டித் தன் வலையில் சிக்கவைக்க வழிதேடிய சாத்தானை வென்றுவிடுகிறார் இயேசு. மனித வாழ்வு வெறும்வயிறும், தோலும் அல்ல அதைவிட உயர்ந்த அவனது மாண்பினைச் சுட்டிக் காட்டினார் இயேசு. ஆற்றல்களையும், சந்தர்ப்பங்களையும் துர்ப்பிரயோகம் செய்து உடல் இன்பத்தினால் தன் ஆன்மாவை இழந்து போகிறவர்கள் சாத்தானால் ஏமாற்றப்படுபவர்.

இன்று பல மனிதர்களையும் கவரும் இன்னொரு பளபளப்பு பதவி என்ற மோகமாகும். கூட்டத்தில் ஒரு முக்கிய புள்ளியாக உயர்ந்து நிற்க விரும்புவது தவறல்ல, ஆனால் மனிதன் தனக்குத்தானே வழிபாடு செய்யக் கூடாது. சுய அதிகாரத்தையும். அந்தஸ்தையும் நிலைநாட்ட ஆண்டவனைப் பணயம் வைக்கமுடியுமா? இது தான் இயேசுவின் கேள்வி. நீதியை விற்று, உண்மையைப் புதைத்து, மனச்சாட்சியை மழுங்க வைத்து, மனிதர்களை அடிமையாக்கி ஆசனங்களைக் கைப்பற்றுவது நாஸ்திகனின் திருவிளையாடல் பல அரசியல் வாதிகள் அப்படித்தான் என்று கூறிவிடுகிறோம். ஆனால் பல மனிதரின் செயற்பாட்டின் பின்னணியிலும் 'நான்' என்ற சிலை வழிபாடு தலைதூக்குகிறதே. தன் தந்தையின் சித்தத்தை உயிரிலும் மேலாக கருதியவர் இயேசு. உன் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே ஆராதிப்பாயாக என அதிகார வெறியின் சோதனையை உண்மைப் பக்தியால் சுட்டெரிக்கிறார் அவர்.

ஜெருசலேம் முகட்டில் இருந்து குதித்தால் ... இறைவன் தன் மகனைக் காப்பாற்றுவாரா? பெரிய சந்தேகத்தைக் கிளப்பிவைக்கிறது சாத்தான். சந்தேகத்தையே பேய் என்பார்களே. விதி, விதி என்று சோர்ந்து விழுகிறார்களே சில மூடர்கள, தோல்வி, ஏமாற்றம் என்றால் இறைவன் கைவிட்டுவிட்டார் என்கிறாரே சில 'சோதிட மனிதர்கள்' இறைவனிலும், அவர் பராமரிப்பிலும் எள்ளளவேனும் சந்தேகம் வேண்டாம். வாழ்வை ஆகாயத்தில பறந்து திரியும் வித்தையாக்காதீர் என்றும் தம் செயலால் எச்சரிக்கிறார் இயேசு.

மனிதன் தன மனித இயல்பில் சோதிக்கப்படுகிறான். சோதிக்கப்படவும் வேண்டியவன ஆனால் சோதனைகளைச் சவால்களாக மன உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டும். அவன் கொள்ளும் உயர் இலட்சியப் பண்புகளை எவ்வேளையிலும கைவிடாமல் இறுதிவரை உணமை இறைவனுக்குப் பணிவிடை செய்யும்போது அவன் இறைமக்கள் கூட்டத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவன். அவனுக்கு வாழ்வு ஒரு வெற்றி முரசு.

—சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

உப. 26: 4–10 கடவுளாகிய ஆண்டவரையே பணிந்து தொழு
உரோ. 10: 8–13 அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே.
லூக். 4: 1–13 அலகையினால் சோதிக்கப்பட்டார்.

★ உருவகக் கதை

# மனிதத்துவத்தின் பெறுமதி

இரண்டு காகங்கள் கணவன் மனைவியாக ஒரு மரத்திலே கூடுகட்டி, இன்பமுடன் வாழ்ந்து வந்தன. பெண்காகம் முட்டையிட்டு தன்கூட்டினுள், அடைகாக்கத் தொடங்கியது. ஆண்காகம் மிக மகிழ்ச்சியுடன் அதற்காக ஒவ்வொரு நாளும் இரைதேடிவரப் பறந்து செல்லும். ஒரு நாள் பெண்காகம் உண்ணாவிரதம், இருக்கத் தொடங்கியது. தன் கணவனைக் கண்டதும் அது முகத்தை, உம் என்று வைத்துக் கொண்டது. ஆண்காகம் மனம்வருந்தியது. மனைவிக்காக விதம் விதமான இனிப்புப்பண்டங்களை, உணவுப்பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்தது. ஆனால் பெண்காகம் ஏறெடுத்துப் பார்க்காது முகத்தைத் திருப்பிக்கொண்டது. ''ஏனடி நீ ஒன்றையும் சாப்பிடாமல் இருக்கிறாய்'' என்று ஆண்காகம் பெண்காகத்திடம், கவலையுடன் கேட்டது. ''அத்தான், எனக்கு மனித இறைச்சி வேணும், அது சாப்பிட்டு கனநாளாச்சுதே, நீ அதை கொண்டு வந்து தாவன்'' என்றது. ஆண்காகம் இதைக் கேட்டதும், மகிழ்ச்சியுடன் விர்ரென்று பறந்து சென்றது. இவற்றைப்பார்த்துக் கொண்டிருந்த மனிதன் 'மலிவான பண்டம் நம்மட, மனித உடல் தான்' என்றெண்ணி மனவருத்தத்துடன அங்கிருந்து சென்றான்.

★ ''படுகொலைகளும், உயிரழிவுகளும், தொடர்ந்தால் மனிதத்துவம் மரணித்து விடும்''

— நிலான் சந்தாப்பிள்ளை

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
10-2-1989
அன்பு இளம் உள்ளங்களுக்கு

## வாழுங்கள் !!




அகந்தையைத் துறந்து
இகபதனல் வாழுங்கள்.
சுயநலம் களைந்து
சுடர்விட்டு ஒளிருங்கள்.
இருளினை அகற்றி
ஒளியினை ஏற்றுங்கள்.
பகைமையை ஒழித்து
பாசத்தை வளருங்கள்.
பழிதனைப் போக்கி
வழிதனைக் காட்டுங்கள்.
தீயவை தகர்ந்து
தூயராய் திகழுங்கள்.
வறுமையை விரட்டி
வளமுடன் வாழுங்கள்.
வற்றாத அன்பின்
ஊற்றாக விளங்குங்கள்.
தோல்வியைத்துரத்தி
வாழ்வினில் வெல்லுங்கள்.
தீண்டாமை நீக்கித்
தொடர்பினை திருத்துங்கள்.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## இச்சை

இச்சையுடன் ... பழகாதே ...
இச்சையை உன் அண்டை விடாதே
அது உன்னை ஆட்கொள்ளவும் விடாதே
உன் எதிரியாக அதை வைத்துக்கொள்.
நீ என்றும் இதனுடன் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டும்.
இச்சை என்பது ஒரு சிறைக்கூடம்,
அதில் நீ தவறுதலாகக் கூட கால் வைக்காதே.
அது உன்னை இழுத்து விழுங்கிவிடும்.
இதில் இருந்து நீ மீள நினைத்தால் அது
கல்லிலே நார் உரித்ததுபோல்
அருமை நண்பன் நண்பியாயினும் கூட
இச்சையுடனோ அல்லது காமத்துடனோ
வாழ முயற்சிக்காதே
இச்சையானது தீயும் பஞ்சும்போல்
எப்பவுமே மனிதனில் பற்றலாம்.
கர்ச்சிக்கும் சிங்கம்போல யாரை
விழுங்கலாமென காத்திருக்கின்றது.
இனியவற்றை நாடு
எளியவற்றை விலக்கு.
இறுதியில் உமக்கு கிடைப்பது
இரட்சிப்பே அன்றி
இருள் நரகம் அல்ல.

யோ. கலிறஞ்சன்.
இளவாலை.

---

## நான் வாழ்ந்திட

ஆராதனை செய்திடுவேன் இயேசுவே — என்
ஆணவத்தை அடக்கிவிடும் வாழ்ந்திட
புகழ்கின்றேன் உம்மையே பரமனே — என்
புலம்பலை நீக்கிவிடும் வாழ்ந்திட

துதிகள் பல பாடுகிறேன் பாலனே — என்
துயரெல்லாம் தீர்த்துவிடும் வாழ்ந்திட
வணங்குகிறேன் உம்மையே தெய்வமே — என்
வன்செயலை நீக்கிவிடும் வாழ்ந்திட

போற்றுகிறேன் உம்மையே இறைவனே — என்
போக்கினையே திருத்திவிடும் வாழ்ந்திட
வாழ்த்துகிறேன் உம்மையே தேவனே — என்
வாழ்வினிலே ஒளியைக் காட்டும் வாழ்ந்திட

நாடுகிறேன் உம்மையே நாதனே — என்
நாவையுமே மாற்றிடுவீர் வாழ்ந்திட
தேடுகிறேன் உம்மையே அன்பனே — எனை
தேற்றிவிடும் உம்மிலே வாழ்ந்திட

M.M. நிக்ஸன்

---

## என்றொரு......

1. உள்ளம் என்னும்
கோவிலினிலே,
உரிமை என்றொரு கீதமடா.
2. வாழ்வு என்னும்
பயணத்திலே,
வறுமை என்றொரு
பிணியடா.
3. இளைஞன் என்னும்
பருவத்திலே,
இளமை என்றொரு
வசந்தமடா.
4. மதம் என்னும்
மதுவிலே,
மனிதன் என்றொரு
விலங்கடா.
5. கனவு என்னும்
கதையிலே,
கற்பனை என்றொரு
விதையடா.

அன்புக் குழந்தை
முருங்கன்.

---

## இயேசுவும் மூன்றும்

இயேசுவை முதல முதல் காணச்சென்றோர் — மூன்று
இயேசு மலையில் பசாசினுல் சோதிக்கப்பட்டது — மூன்று
இயேசு அழைத்தும் பின் செல்ல மறுத்தவர் — மூன்று
இயேசு பாடுகளை முன்னறிவிப்புச் செய்தது — மூன்று
இயேசுவை இராயப்பர் மறுதலித்தது — மூன்று
இயேசுவுடன் கடைசி இரவில் கெத்சேமனித் தோட்டத்தில் இருந்தவர் — மூன்று
இயேசு மரணவேதனையுடன் சீடர்களிடம் திரும்பியது — மூன்று
இயேசு சிலுவையுடன் விழுந்தது — மூன்று
இயேசுவுக்கு அறையப்பட்ட ஆணிகள் — மூன்று
இயேசு சிலுவையில் தொங்கிய மணித்தியாலம் — மூன்று
இயேசு உயிர்த்த நாள் — மூன்று
இயேசு உருமாறும்போது அவருடன் இருந்தவர் — மூன்று

யா. யூலன் குரூஸ்,
பேசாலை.

---




(சென்றவாரத் தொடர்ச்சி)

இத்தகைய உதவிகள் முக்கியமாக வழங்கப்பட்ட வேண்டிய முறைகள்.

1 கிறிஸ்தவ விசுவாசிகள் கிறிஸ்தவத் திருமணத்தின் உட்கருத்து, தம்பதிகளின் பொறுப்பு, பெற்றோர்களின் பொறுப்பு ஆகியவைகளை நன்கு உணருமாறு சிறுவர்கள், இளைஞர்கள், வயது வந்தவர்களின் தகுதிக்கேற்ப போதனை, மறைக்கல்வி இன்னும் சமூகத் தொடர்புக்கருவிகள் வழியாக பாடங்கற்பிக்கப்பட தயாரிப்பு அளிக்கப்பட வேண்டும்.

2 தம்பதிகள் தாங்கள் புகவிருக்கும் புதிய நிலையாகிய திருமணத்தின் புனிதத்தன்மைக்கும் பொறுப்பிற்கும் ஆயத்தமாவதற்க, அவர்களுக்குத் தனிப்பட்ட தயாரிப்பு அளிக்கப்படவேண்டும்.

3 கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள நெருங்கிய ஒன்றிப்பு, வளமான அன்பு இவைகளின் மறைபொருளுக்குத் தம்பதிகள் அடையாளமாய் இருக்கிறார்கள் என்பதும், அந்த மறைபொருளிலே பங்கு கொள்கிறார்கள் என்பதும் துலங்கும் வண்ணம், பயனுறுவிதத்தில் திருமண வழிபாடு கொண்டாடப்பட வேண்டும்.

4 திருமணம் செய்துகொண்டவர்கள் தங்கள் திருமண உடன்படிக்கையைப் பிரமாணிக்கமாய் அனுசரித்து, பாதுகாத்து நாளுக்கு நாள் அதிகமதிகமாய் குடும்பத்திலே புனிதமான, நிறைவான வாழ்வு வாழ்ந்து அதனைக் கண்டடைய, அவர்களுக்கு வேண்டிய உதவி அளிக்கப்படவேண்டும்'' தி. ச. 1063)

இவ்வாறு மணமக்களுக்கு எல்லா நிலைகளிலும்—அதாவது, திருமணத்திற்கு முன், திருமணத்தின் போது, திருமணத்திற்குப்பின்—பொதுவானதும், சிறப்பானதுமான பாடமும் பயிற்சியும் அளித்து உதவிடகிறிஸ்தவ சமூகம் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறது.

திருமணம் நடத்துவதற்குமுன் எந்த விதத்தில் பங்குக்குரு தம்பதிகளை ஆராய்ந்தறிதல் வேண்டும், எப்படி திருமண அறிக்கை (பறை, ஓலை) வெளிப்படுத்தப்பட வேண்டும், வேறு எந்த விசாரணை நடத்த வேண்டும் என்பதையெல்லாம் பற்றிய சட்ட திட்டங்களை ஆயர் குழு வகுத்துக் கொடுக்க வேண்டும் (தி. ச. 1067).

திருமணத்தால் கிறிஸ்தவத் தம்பதிகள் ''திருநிலைப்படுத்தப்படுகிறார்கள்'' (இன்றைய உலகில் திருச்சபை, எண் 48). திருமணத்தால் உருவாகும் குடும்பம் ''இல்லத் திருச்சபை'' (திருச்சபை, எண் 11). திருமண அருளடையாளத்தின் ஆற்றலால் தம்பதிகள் தங்கள் ''திருமண, குடும்பக் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றால் தங்களின வாழ்வு முழுவதையும் நிறைத்து நிற்கும் கிறிஸ்துவின் மனநிலையில் ஊறித் திளைத்தவர்களாய் அவர்கள் அதிகமதிகமாகத் தங்களை நிறைவுடையவர் ஆக்குவதோடு, ஒருவரொருவரையும் புனிதபபடுத்துகிறார்கள இவ்வாறு அவர்கள் சேர்ந்து கடவுளை மாட்சிப்படுத்துகிறார்கள்'' (இன்றைய உலகில் திருச்சபை, எண் 46).

''மனிதர்களின் மீட்பு எப்போதும் திருச்சபையில் ஒப்புயர்வற்ற சட்டமாயிருக்க வேண்டும்'' (தி. ச. 1752).

* * *

குடும்பத்தில் கணவன் மனைவியிடையே காணப்பட வேண்டிய பெருந்தன்மையான குணநிசயங்கள்.

'இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக' என்கிறார் இறைவன் பல விதவேறுபாடுகள். சூழ் நிலைகளிலுமிருந்து பிரிந்து ஒரு ஆணும் ஒருபெண்ணும் சேர்ந்து ஒரு குடும்பமாகிறார்கள். இவ்வாறு இணைந்தவர்களிடையே பலவேறுபாடுடைய மனநிலை இருக்கத்தான் செய்யும்—ஆனால் அவர்கள் அவைகளை தம்மிடத்துள்ள பெருந்தன்மைமிக்க குணங்களால் சகித்தும், விட்டுக்கொடுத்தும் வாழ்வார்களானல், நிச்சயம் அவர்களை ஒரு விசுவாசம் நிறைந்த கத்தோலிக்க குடும்பமென்றே கூறலாம். இதற்கு குடும்பத்தில் வாழும் தலைவனும் தலைவியும் தமது முழு ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித் தனிப்பொறுப்புக்கள் குடும்பத்திலே உண்டு. முதலில் குடும்பத்தலைவனை எடுத்துக் கொள்வோம். நாளாந்தம் தொழில்புரியச்செல்லும் அவன், வேலையும் தனது மாதாந்த வேதனமுமே தனது பொறுப்பு என எண்ணுதல் தவறு தான் ஒரு பாடசாலை மாணவனாக மாறிவிட நினைக்கின்றான். (தொடரும்)

— அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை




| | |
|---|---|
| ஒளி: ) <br> சுடர்: 6 | எம் விழிகளின் ஒளி யேசு <br> எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை :

இதோ அந்த ஏற்புடைய காலம் இதுவே,
இதோ அந்த மீட்பின் நாள் இதுவே.

2 கொரி 6: 2

### தொண்டு:

அன்று துறவிகள் தவங்களை காடுகளிலும் மலைகளிலும் செய்தார்கள். இன்று அங்கு சென்று தவம் செய்ய வேண்டியதில்லை நம்மைச் சுற்றி, நாம் வாழும் மண்ணில், நாம் செய்யவேண்டிய தொண்டுகள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. பட்டம், பதவியை எதிர்பார்க்காது, சேவை உணர்வோடு பணி புரியும் தொண்டர்கள் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் உண்மைத் தொண்டனாக வாழவே கிறிஸ்து அன்று தன் சீடர்களின் கால்களைக்கழுவி மாதிரி காட்டினார். தவக்காலத்தின் நேரத்தை உண்மைத் தொண்டனாக மாற்றம் பெற, நம் தியாகத்தலைவர் யேசுவோடு, அவர் பாடுகளில் பங்குபெற எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்போம்.

ம. மதுரநாயகி
அங். எண்: 130.

### தானம்:

தானத்தில் சிறந்த தானம் என்ன தானம்?
உயர் தானத்தில் உள்ளவரும் தேடும் தானம்
உயிர் காக்க, வரும் தானம் என்ன தானம்?
அதுவே உயரிய தானம் இரத்த தானம்.

தன்னிலை மறந்து வாழ்கின்ற சில வுள்ளங்களும்
துன்பமாய் துவழுகின்ற வேளையிலே
அன்புள்ளம் கொண்ட தொண்டரும்
அன்புடன் அளித்திடும் தானம் இரத்த தானம்.

பதவி பிடிக்க அளிக்கும் தானத்திலும்
பட்டம் பெற கொடுக்கும் தானத்திலும்
பணத்திற்காகச் செய்யும் தானத்திலும்
இரத்த தானம் அடங்கிவிட்டால் என்ன பயன்?

கசையடியால், முள்முடியால் சிந்திய இரத்தத்தினை
காலம் காலமாய்ச் சிந்தித்து வருகின்ற வேளையிலும்
இதயத்தில் ஊறுகின்ற இரத்தங்கள்
தூயதாய் மாறாவிட்டால் என்ன பயன்?

ச. யேசுதாசன்
அங். எண்: A 3.

### யார் இவர்?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரினில் ஒருவர் தோன்றினார். முப்பது வருடங்கள்முன்னறி தெய்வத்தொண்டினை முழுமையாகச் செய்தார். பன்னிரு சீடர்களை தன் பணிக்காகத் தேர்ந்தெடுத்தார். இரவு பகல் பாராது மழை வெயில் நோக்காது, பணி பல செய்தார்.

அதனால் அவரைச் சுற்றி... பண்பட்ட பண்பாளர்! கூடினர்! பணி பல புரிந்த சேவையாளர் சேர்ந்தனர்! நெறி கெட்ட பாவிகள் பாவம் போக்க வேண்டி பாதத்தில் பணிந்தனர். அசுத்த ஆவியால் ஆட்கொண்டோர் அவற்றினை அகற்றிட வேண்டினர். துன்புற்ற நோயாளிகள் நோய்தீர்க்க அழுதனர். கருத்துடன் உரையாட அறிஞர் கூடினர்.

இத்தனைக்கும் அவர் வாழ்ந்த, சமூகத்தின் மேல்மட்ட மனிதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தனர். அதற்கு அவரின் சீடன் ஒருவனை கருவிஆக்கினர். தம்குரலை மக்களின் குரலாக மாற்றினர். இருந்தும் மூன்றாம் நாள்............

கல்லறை உடைக்கப்பட்டு அவர் உயிர்த்தார் யார் இவர்? அவர் தான் நம் தலைவர் இயேசு.

அன்பின்
அன்பு விழி.

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

வாசகர்களே!

நல்லவர்கள் வாயில் இருந்து வருகின்ற வார்த்தைகள் சமுதாயத்தைச் சீர்திருத்த எழுகின்ற பொன்மொழிகள் அனைத்தும், "நற்செய்திகள்" என்று சொல்லலாம் அல்லவா?

இன்னொன்று கூறட்டுமா? "உன் நண்பன் யார் என்று நீ சொல்? — நீ யார் என்று நான் சொல்வேன்" என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. இது போல 13/20 ல் 'ஞானிகளுடன் நடக்கின்றவன் ஞானியாவான்- மதியீனர்களின் நண்பன் அவர்களைப் போலாவான்" என்று உரைக்கின்றார் ஆசிரியர்.

சாதாரண தமிழிலே சகலரும், புரிந்து கொள்ளக்கூடிய முறையிலே இரு பொன்மொழிகளை பட்டென உரைக்கிறார் தமிழறிஞர்- "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" "பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும்" - இது பற்றி உங்கள் எண்ணம்...?

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்- மண்ணில் பிறக்கையிலே! அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்றான் இன்றைய கவிஞன். உண்மை தானே. அன்றைய இளைஞர்களுக்கும், இன்றைய இளைஞர்களுக்கும் எத்தனை தூர வித்தியாசம் பார்த்தீர்களா? அன்று பெற்றோர்களின் சம்மதப்படி தான் பிள்ளைகளின் வாழ்வு 'எதிலுமே' நிறைவுபெறும்!

இன்றோ பிள்ளைகள் தானே பெற்றோர்களுக்கு புத்தி சொல்ல முனைப்படுகின்றார்கள்!

இப்படிப்பட்டவர்களுக்கு திருநூல் தெளிவான பதிலைக் கூறி எங்களைத்திருத்த முன்வருகின்றது! எப்படி என்கின்றீர்களா?

"பிரம்பால் அடிக்கத் 'தயங்குகின்றவன்' - தன் பிள்ளையைப் பகைக்கின்றான்- அவனை நேசிக்கின்றவனோ - கட்டாயமாகக் கற்பிக்கின்றான்" (13 : 24)

அழகாகத் திருநூல் தெளிவுபடக் கூறும் இவ் அறிவுரைக்கு நம் முன்னோர்கள் மட்டும் விதிவிலக்கா?

அவர்களும் தெள்ளிய தமிழிலே தெளிவுபடக் கூறுகிறார்கள் இப்படி!

"அடித்து வளர்க்காத பிள்ளை பிள்ளையுமல்ல- முறித்து வளர்க்காத முருங்கையும், முருங்கையுமல்ல" அத்தோடு இன்னொன்றையும் கூறுகின்றார்!

'அடியாத மாடு படியாது" பொருத்தம் எப்படி?

இன்னொன்றையும் கேளுங்களேன்!

இன்று சமுதாயத்திலே பாரதி விரும்பிய "பெண்விடுதலையை" நமது 'தாய்க்குலம்' பலபட, அர்த்தப்படுத்திக் கொள்ளுகின்றார்கள்!

நம் முன்னோரின் மூதுரையை தாய்க்குலமே! நீங்களும் சற்று யோசித்துப் பாருங்களேன்!!

### வாரம் ஒரு சிந்தனை

"அடிக்கடி அன்பு என்னும் "கலப்பை" கொண்டு உன் இதய நிலத்தை "உழுது" செப்பனிடு"

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.




திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

## சிறிய இறைவாக்கினர்-12

### அப்தியாஸ்—1

அப்தியாஸ் என்னும் சொல்லின் எபிரேய வடிவம் 'ஒபாதியா' ஆகும். இதற்கு 'ஆண்டவரின் அடிமை' என்று பொருள். இறைவாக்கினர் நூல்களிலேயே மிகச்சிறியது இந்நூல் தான்.

இந்நூல் எதிர்கால நம்பிக்கை என்னும் கருத்து வளர்ச்சியில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது இதில் இறுதிக்கால இறையியலும் அமைந்துள்ளது. இந்நூலை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஏதோமுக்கு எதிராக ஏற்கெனவே இருந்த இறைவாக்குகளைத் தொகுத்து ஒபாதியா இறைவாக்கினர் முதற் பகுதியை எழுதினர். இரண்டாம் பகுதியில் தனது சொந்த வாக்குகளைத் தொகுதது எழுதினர்.

இந்நூலில் காணப்படும் இறைவாக்குரை ஏதோம் நாட்டையும் அதில் வாழ்ந்த ஏதோமித்தரையும், நோக்கிக் கூறப்படுகிறது. இந்த ஏதோமித்தர் யாக்கோப்பின் சகோதரரான ஏசாயுவின் சந்ததியினராவார். ஆகவே இஸ்ராயேலருக்கு உறவினர். ஆயினும் இரு இனத்தவரிடையே எப்போதும் பகைமையும் சண்டையும் இருந்து கொண்டேயிருந்தன. இஸ்ராயேல் வரலாறு முழுவதும் ஏசாயுவுக்கும் யாக்கோபுவுக்கும் இடையேயும், அவர்களுடைய சந்ததியினர்களிடையேயும், கசப்பான பகைமை நீடித்தது.

பிற்காலத்தில் பாபிலோனியர் யூதாவை வென்றபோது ஏதோம் பாபிலோனியரோடு சேர்ந்து யூதாவுக்கு எதிரான பழம் பகைமையைத் தீர்த்துக்கொள்ள முயன்றது. கி. மு. 587 ல் நபுக்கோதனசார் எருசலேமை முற்றுகையிட்டபோது பரிசுத்த நகரை அழிக்கும்படி ஏதோம் பாபிலோனியரைத் தூண்டியது. யூதாவின் மக்கள் நாடுகடத்தப் பட்டபோது ஏதோமித்தர் இறைமக்களது வேதனைமிக்க துன்ப நிலை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். யூதாவைச் சூறையாடினர். தப்பி ஓடியவர்களைக் காட்டிக்கொடுத்து எதிரியிடம் ஒப்படைத்தனர். அந்த சகோதரத்துரோகத்தை நாட்டுப்பற்றுடைய யூதர்கள் மனதார வெறுத்தனர் ஒரு போதும் இத் துரோகத்தை மறக்கவில்லை. பாபிலோனிலிருந்து யூதர்கள் தாயகம் திரும்பிய பின்னும் இரு இனத்தவரிடையே நல்லுறவு ஏற்படவில்லை. இதை ஒபாதியா இறைவாக்கினர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்நூலில் காணப்படும் ஏதோமுக்கு எதிரான பழிப்புரை யூதாவின் அரசர்கள் காலத்தில் ஏதோமுக்கு எதிராகக் கூறப்பட்ட இறைவாக்குகளை எதிரொலிக்கிறது. ஏற்கெனவேயுள்ள ஏதோமின் பாவநிலை, யூதாவுக்குச் செய்த சகோதர துரோகத்தினால், மேலும் மோசமாயிற்று என்று ஒபாதியா இறைவாக்கினர் கூறுகிறார்.

இ. சா. பங்கிராஸ்.

அறிந்து கொள்ளுங்கள் 67

## யாத்திராகமம் கூறுவது என்ன?

புதிய ஏற்பாட்டில் இறைமகன் மனுஉருவெடுத்தது எப்படியோ, அப்படியே பழைய ஏற்பாட்டுக்கு யாத்திரை நிகழ்ச்சி முக்கியமானது. இஸ்ராயேலர் தனிச்சிறப்புடன் தேர்ந்தெடுக்கப்படுதல், எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து விடுதலை அடைதல், யாவேயுடன் செய்துகொண்ட உடன்படிக்கை முக்கியமான நிகழ்ச்சிகள், இவற்றிற்கு அடிப்படை வரலாற்று உண்மைகளுக்கு வலுவான சான்றுகள் கூறப்படுகின்றன.

தேர்ந்தெடுத்தல், விடுதலை உடன்படிக்கை அடங்கிய ஒரு தொகுப்பாகும். யாத்திரை யாகமம், இது பழைய ஏற்பாட்டுச் சமயத்தின் சிறப்பான முக்கியமான சத்தியமாகும். யாத்திரையாகமம் நிகழ்ச்சியின்றி இஸ்ராயேல் சமயத்தையும் பிற்கால சமய அரசியல் சமூக அமைப்பையும் புரிந்துகொள்ள முடியாது.

இந்நூலில் காணப்படும் சட்டப்பொருள்கள், சிறப்பாக 10 கற்பனைகள் உடன்படிக்கைச் சட்டம் ஆகியவை பெரிய இறையியல் சிறப்பும் முக்கியமும் வாய்ந்தவை. இஸ்ராயேல் ஒரு சமயக் குழுவாக இருப்பதற்கும் யாத்திரையாகம நிகழ்ச்சிகள் அடிப்படையாகும்,

—இ. ம. ஜெயசீலன்

## இரண்டாம் வருட இரங்கல் நினைவு



ஞா. வில்விறெட்

மண்ணில் 4-11-1937 விண்ணில் 12-02-1987

இருளகல ஒளியேற்றலாம்
பயிர்வளர நீர் பாய்ச்சலாம்
உள்ளத்துயர் போக்க
இறைவா நீரேவழி!

எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற 12-02-89 ல் விசேடவிதமாக வேண்டுவோமாக.

மனைவி, மக்கள், தாய், தந்தை
உற்றார், உறவினர்
சில்லாலை A/26

## விண்ணக வாழ்வின் 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி ஆ. இரத்தினம்
மலர்வு: 1913 உதிர்வு: 11-01-1989

"உயிர்ப்பும் உயிரும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும்வாழ்வான்"
அரு. 11-25-26

மதுரமான யேசுவே, இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமது இயல்பாமே. எனவே இப்பூவுலக வாழ்வை நீக்கி உம்முடன் ஒன்றித்திருக்க தேவரீர் நேசத்துடன் அழைத்துக்கொண்ட ஆ. இரத்தினம் அவர்களின் குற்றங்களை மன்னித்து நித்திய பேரின்ப வாழ்வை அளித்தருளும். சமாதானத்தில் இளைப்பாறுவாராக. ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித திரேசாள் ஆலயத்தில் 10-02-89 வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
திரு. திருமதி. ம. அ. இரத்தினசிங்கம்
குடும்பத்தினர்
8/1 றக்கா றேட்,
யாழ்ப்பாணம். A/26

## விண்ணக வாழ்வின் 90-ம் நாள் நினைவாஞ்சலி



டேவிற் அலன் அன்ரன்
மண்ணில் 17-5-68 விண்ணில் 13-11-88

இரக்கத்தின் தேவனே! உம்சித்தப்படியே இவ்வுலகின் அனைத்து கருமங்களும் நிறைவேற்றப்படுகின்றன என்பதை ஆழமாக விசுவசிக்கும் நாம், எம் ஒரே ஒரு அன்புமகனை, உம்சித்தப்படியே அர்ப்பணித்த 90-ம் நாளிலே, உமது மட்டிடற்கரிய மகிமையை அவருக்கு அளித்திடவேண்டும் என்று மன்றுருகிறோம் ஆமென்.

பிரிவால் துயருறும்
தந்தை: C. V. அன்ரனி
(நெல்சன் தியேட்டர்)
திருகோணமலை
தாய்: பிலோமினா அன்ரன்
(ஆசிரியை), திருகோணமலை
சகோதரி: பேணடீன்
உறவினர், நண்பர்கள்.
A/29

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன். பே. அன்ரன் சேவியர்
மலர்வு: 16-06-1963 உதிர்வு: 04-02-1987

உனது 'இலட்சியக் கனவுகள்'
உயிர் மூச்சோடு மூச்சாய்
காற்றில் கலக்கவில்லை!
அவை —
எங்கள் மண்ணில் —
எங்கள் இதயங்களில் —
எங்கள் நாடி நரம்புகளில்
என்றென்றும் நிலைத்து வாழ்ந்து,
என்றோ ஒரு நாள்
நனவாகும் !!

★ அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக முருங்கன் கிறிஸ்து அரசர் தேவாலயத்தில் 10-02-1989 அன்று காலை 6-30 மணியளவில் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
அன்பின்— பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
முருங்கன் பிட்டி
முருங்கன். A/27

## அவள் தோற்கவில்லை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுப்வரை அவள் உயிருக்கு எதுவும் நடந்துவிடக்கூடாது என்று மாதாவை வேண்டிக் கொண்டார்.

மறுநாள் காலை புறப்பட்டு அவர் இலுப்பைக்குளத்தை நெருக்கிக்கொண்டிருந்தபோது நேரம் நடுப்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. மழை சற்று விட்டிருந்தது. மழையைத் தொடர்ந்து யானைகளும், எருமைமாடுகளும் அந்தப் பாதையை சகதியாக்கிவிட்டிருந்தன. அவருடைய மோட்டார் வண்டியை அதற்குள் ஓட்டிவருவதே சிரமமாகவிருந்தது. இலுப்பைக்குளவாசி ஒருவர் வழியில் எதிர்கொண்டுவருவதைக் கண்டு வண்டியை நிறுத்தி அவரிடம் கேட்கிறார்?

"நேற்றுத் துவங்கி மூச்சு இழுத்துக்கொண்டுதான் கிடக்குது. இண்டைக்கு இன்னும் கடுமையாய் இருக்குது. இந்நேரம் ஆள் முடிஞ்சிருக்கும்', என்று சொன்னவர் போய் விட்டார். சுவாமிக்குப் பெரும் கவலை. 'நாம் இத்தனை தூரம் வந்தும் அவள் ஆசையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே. சரி வந்த நாம் பிணத்தையாவது ஆசீர்வதித்துவிட்டுப் போவோம்' என்று தொடர்கின்றார்.

சுவாமியின் மோட்டார் வண்டி இரைச்சல் கேட்டதும் எல்லாரிடமும் ஒரு பரபரப்பு 'அந்தா சுவாமி வந்துவிட்டார்' என்ற ஆரவாரம். அந்த அமளிக்குள் மதலேனாள் கண்திறந்து பார்க்கிறாள். 'மதலேனாவுக்கு எப்படி?" என்று சுவாமி விசாரிப்பதும் "உங்களுக்காகத்தான் இழுத்துக்கொண்டு கிடக்குது சுவாமி" என்று முத்தையர் விம்மலோடு கூறுவதும் உள்ளே இருந்தவர்களுக்குக் கேட்கிறது.

உள்ளே வந்த சுவாமி அனுதாபத்துடன் அவளைப் பார்க்கின்றார். ஆவல் ததும்பும் விழிகளால் அவரைப் பார்க்கின்றாள் மதலேனாள். அவள் கண்களில் நன்றிப் பெருக்கு கண்ணீராக ஊற்றெடுத்து கன்னங்களால் வழிகின்றது. தாமதம் செய்யாது நோயிற் பூசுதல் சடங்கை நிறைவேற்றி நன்மையும் வழங்குகின்றார். எல்லாம் முடிந்த பின்னரும் அவள் அவரை ஏக்கத்தோடு பார்க்கின்றாள்.

"என்ன பிள்ளை வேண்டும்?" என்றார் சுவாமி. அவளால் பேசமுடியவில்லை. தனது வலக்கரத்தைத் தூக்கி தனது கழுத்தைத் தொட்டுக் காட்டுகின்றாள். சுவாமிக்குப் புரியவில்லை. மகள் மிக்கேலியாதான் பதில் கூறினாள். "அவ உத்தரியம் பெற்றவ சுவாமி நெடுகலும் கழுத்தில போட்டிருந்தவ இந்த நேரத்தில அது இல்லை அதுதான் கேட்கிறா"

'நான் இப்ப கொண்டு வரவில்லையே பிள்ளை. சே... என்ன செய்யிறது?" என்று கவலைப்பட்டுக் கொண்டவராக தன் பைகளைத் தடவியவர் திடீரென முகம் பிரகாசமடைந்தவராக "இஞ்சஇருக்குது" என்று வியப்புடன் எடுத்துக் கொடுக்கின்றார். "எனக்கே தெரியாது. நான் எப்ப இதை எடுத்து வைச்சனான் என்று. மதலேனா, நீ உண்மையிலேயே மாதாபக்தி உடையவள் தான்" என்று கூறும்போது அவரே உணர்ச்சி வசப்பட்டுப் போகிறார்.

மதலேனாவின் முகத்தில் என்றுமில்லாத... அமைதி... சாந்தி நன்றிப்பெருக்குடன் கையெடுத்துக் கும்பிடுகிறாள். சுவாமி அவளிடம் இறுதி விடை பெறுகின்றார். அவருடைய மோட்டார் வண்டி ஊரத்தொடங்கி சுமார் நூறு யார் தொலைவில் இருக்கும் குளத்துவானை அண்மித்த போது... "ஐயோ என்ரை அம்மா" என்று மிக்கேலியா குரல்வைத்து அழுவதும் அதனைத் தொடர்ந்த பெண்களின் பேரழுகையும் கேட்கிறது.

சுவாமி வண்டியை நிறுத்துகின்றார். அவர் மனதில் மதலேனாவின் விசுவாசம் தோற்கவில்லை என்பதை எண்ணும்போது அவரது கண்களும் பனிக்கின்றன.

அன்று முதல் மாதா பக்தியைப் பற்றி அவர் பிரசங்கம் செய்த மேடைகளில் பெரும்பாலும் மதலேனாவின் சனிக்கிழமைப் பக்தியைப் பற்றி சொல்லாது விடுவதில்லை.

(பெயர்கள், ஊர், சம்பவம் யாவும் உண்மை)

## வேதாகம வினாவிடைப் போட்டி-22

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 8—3—89 ஆம் திகதிக்குமுன் பாதுகாவலன், அ. பெ. இல. 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். பரிசு ரூபா 25/- விடையும் பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 17—3—89இல் வெளிவரும். விடைகளை நீதிபதிகள் ஆகமம் 16—21 அதிகாரங்களில் காணலாம்.

### வினாக்கள்

1. பிலிஸ்தியரின் மக்கட் தலைவர் அனைவரும் எவ்வாறு இறந்தனர்?
2. "எபோது", 'தொபீம்" என்ற பதங்களின் பொருள் என்ன?
3. காரியாத் யாரிம் ஏன் "தானின் பாசறை" என அழைக்கப்பட்டு வருகிறது?
4. முதலில் லாயீசு என அழைக்கப்பட்ட நகரம் பின்னர் எவ்வாறு அழைக்கப்பட்டது?
5. எபுசு நகரின் மறுபெயர் என்ன?
6. கானான் நாட்டுச் சிலோவிலிருந்த பாளையத்திற்கு, காலாதிலுள்ள ஜாபேலிருந்து கொண்டு வரப்பட்ட கன்னிப் பெண்களின் எண்ணிக்கை யாது?

### போட்டி 21இன் விடைகள்

1. காலாதித்தனை ஜெப்தேயின் மகளைக் குறித்து
2. ஆண்டவருக்குப் பலியிடப்பட்டு.
3. மனுவே.
4. கதிர்
5. சாம்சன்.
6. தாடை மேடு.

பாராட்டுப் பெறுவோர்

ம. மேரி மாகரட், அ. லூக். குருஸ், சூ. பேஜினா, ச. செல்ரன் யூடிற், ஷியாமா அகஸ்ரின், அந்தோனிப்பிள்ளை யோண்பிரகாஸ், பி. அருள் ஞானராஜ், ச. மரியதாஸ், ச. வரப்பிரகாசம், ஜி. தவசீலன், ஏ. அன்ரன் பெசில், த ஜெனிவி பெர்ணாண்டோ, மனோகரன் சுபாஷினி, வின்சென்ற் அன்பழகி மனோகரன் ஜனா, நவரட்ணசிங்கம் சுகந்தன், பிரான்சிஸ் பாலதாஸ், பேனாட் காஞ்சனா, அருளானந்தம் சுகந்தினி, பேனாட் ரேகனா, அல்பிரட் றெபின், கயித்தாம்பிள்ளை ஜெயமதி, சவரிமுத்து சுதர்ஜினி, சூசைராஜா கௌசல்யா, தாவீதுப்பிள்ளை தாரனி, கொன்சன்ரைன் ரிமதி, பிரான்சிஸ் ஸ்ரீபன், சுந்தரலிங்கம் ஷாம் சுரேஷ், அந்தோனிப்பிள்ளை உதயன், அந்தோனிமுத்து சுகந்தி, அல்பிரட் யோகினி, சூசைராஜா யூலியானா மரிய கௌரி, சந்தியாப்பிள்ளை ஞானேந்திரன், ஏ. றஜனி, ஏ. சித்திரா, ஏ. நிலா, சி. சிவகாந்தன், ப. யூடி, சோபியா சோசை, ச. பியூலா, ஜெ. ஜெயப்பிரகாஷ், ச. பிரபாகரன், ப. பப்ரிஸ்ரா சோசை, எஸ். அன்ரன் லெம்பேட், ஏ. றோஸ் லீமா, வி. மேரி பற்றீசியா, செ. மேரி அன்ரனிற்ரா, அ. அந்திரேசுப்பிள்ளை, அ. ப. எழில் அமலன், டி. லக்ஸ்மன் றேச், சா. ப. போல் அஸ்ராஜ், ஏ. வில்டா சிராய்வா, அந்தோனிப்பிள்ளை யோகருணி, கி. கிறிஸ்ரபெல் டலிமா, ஞா றதிகுருஸ், ஜே. கீதாஞ்சலி, தா. சியாமளா, அ. அசம்ரா யோகமலர், எஸ். கௌரி குலாஸ், ம. சறோஜி, சுரேந்திரன்—மரிசலீன், செ. பேரின்பராணி, சுமதிலெம்பேட், சான்பெனற் ஏ சவரி, ஏ நியூட்டன், பே ஊடேற்ரதி, யேசுதாசன், போ. பரமானந்திறாபி, சித்தாத்துரை, ஜெகன், வசந்தசீலன் அருள்சீலிவாஸ், யே. ஜெபநேசன், எ. கலைச்செல்வி, ஜி. அற்புதராசா, லொலன்ரினா, செ. வினிஷியா சுரேந்தினி ஆரோக்கியநாதன், போல் பிறிஜீற் சுகி, நவரட்ணம் அமலநாத், நவரட்ணம் ஜெகப்பிரியன், என். பற்றிமா றேஸ்.

பரிசுபெறும் நற்பேறுளர்
சந்தியோகு மேரி பெசியோனா
எள்ளுப்பிட்டி, திருக்கேதிஸ்வரம்.

Nallur Branch Library

பாதுகாவலன்
PATHUKAVALAN

# தனிநாயகம் தமிழ் மன்ற விழா

"தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் பெயரினைக் கொண்டிருக்கும் இம்மன்றம் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி அரிய நிகழ்ச்சிகளைத் தந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இது போன்றே இம்மன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்திலும் 'தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்' என்ற மன்ற விருது வாக்கினை என்றும் தம் பணியில் கடைப்பிடிக்க மறக்கக்கூடாது". இவ்வாறு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம தமிழ் மன்ற விழாவின் சிறப்புப் பேச்சாளரான மருதனமட இறையியல் கல்லூரி முதல்வர் திரு. ராஜன் கதிர்காமர் தனது உரையிலே வேண்டிநின்றார்.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்ற விழா சென்ற 14-1-89 சனிக்கிழமை மிகவிமரிசையாகப் பொங்கல் விழாவுடன் சேர்த்து மன்றத் தலைவர் அருள் சகோதரன் பெப்பி சோசையின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கல்லூரியின் உபஅதிபர், அருள்தந்தை ஜே. நீக்கிலாஸ் பேசுபோது "தமிழர்களின் கலை, கலாசாரம் மிகவும் மேலானதாக ஏனைய மக்களினால் புகழப்படுகின்றது. ஆனால் தமிழ் மக்களாகிய நாம் எமது கலை, கலாசாரத்தை வளர்ப்பதில் அக்கறையின்றி, மேல் நாட்டுக் கலாசாரத்தையே பின்பற்றுகின்றோம். இது மிகவும் வருந்தக்கூடிய தொன்று. எம்மதம் வெளி நாட்டினரால் கொண்டுவரப்பட்டதாக இருந்தாலும் இப்போது நாம் எமது பண்பாட்டிற்கு ஏற்றதாக இசைவாக்கி, எமது விசுவாசத்தை இன்னும் உயிரூட்டம் உள்ளதாகவும், ஆழமானதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்" என்றார்.

விழாக்குழுவினரால் நடத்தப்பட்ட கவிதை, பேச்சு, பாட்டு, மெல்லிசை, தனிப்பாட்டு, குழுப்பாட்டுபோட்டிகளில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. அத்தோடு "மண்ணாய்... மனிதராய்...," "விழுதுகள்" என்னும் நாடகங்கள் சிறப்புப் போட்டி நிகழ்வுகளாக அரங்கேற்றப்பட்டன. தொடர்ந்து போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களை திரு. ராஜன் கதிர்காமர் வழங்கினார். இறுதியாக கல்லூரிக் கீதத்துடன் விழா இனிதே நிறைவேறியது.

தகவல்: சகாயநாதன்.

# வந். யோசேவாஸ் அடிகளாரின் ஆண்டு நிறைவுத் திருவழிபாடு -வதுளைப் பங்கில்

பதுளை மரியாள் தேவாலயத்தில் 15-1-1989 ஞாயிறு வாரம் வண. யோசேவாஸ் அடிகளாரின் ஆண்டு நிறைவு திருவழிபாடு நடைபெற்றது.

அன்று காலை ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வண. யோசேவாஸ் அடிகளாரின் தியாக வாழ்க்கையைப் பற்றிய உரை பங்குத்தந்தை M. இராஜநாயகம் அவர்களால் கல்மனமும் கரைந்து யாவரும் மெய்மறந்து சிந்திக்கக் கூடியவகையில் நடைபெற்றது. இதன் முடிவில் முனிவருக்குரிய பாடலுடன் பங்குத்தந்தை M. இராஜநாயகம் அடிகளாரின் தலைமையில் பூசைப்பலி ஆரம்பமானது.

ஆரம்பத்தில் பங்குத்தந்தை முனிவரின் உருவத்துக்கு தீபம் ஏற்றி, தூபம் காட்டி, அன்றைய விசேஷ தினத்தை பக்தர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். இதைச் சிங்கள மொழியில் உதவிப்பங்குத் தந்தை V. இக்னேசியஸ் அடிகளார் அறிமுகம செய்தார். மேலும் மறைவகுப்பு இருசிறார்கள் சிங்கள, தமிழ் இரு மொழிகளிலும் சாம்பலிலிருந்து தனிய ஊதி எரியச் செய்த விசுவாச நெருப்பை கொழுந்துவிட்டு ஆசிய நாட்டிலும் ஈழநாட்டிலும் பிரகாசிக்கச் செய்த வண. யோசேவாஸ் முனிவரைப்பற்றி தங்களுக்கு தெரிந்தவற்றைப் பக்தர்களோடு பகிர்ந்து கொண்டார்கள்.

அன்று மறையுரையில் எங்கள் பங்குத்தந்தை வண. யோசேவாஸ் முனிவர் பல இக்கட்டு இடைஞ்சல்களில் ஈழகத்துக்கு காலடிவைத்து சிறை, சித்திரவதை, சாவு எதுக்குமஞ்சாது கத்தோலிக்கரைத்தேடி இறைவனின் ஊழியத்தில் தாராளமாக ஈடுபட்டு வறியோர், நோயாளர், அகதிகட்கு உதவுவதில் பிரியமாய் இருநதார். இதேபோல் நாமும் இன்னல்கள், இடையூறுகள எம்மைச் சூழ்ந்தாலும் முனிவரின் வாழ்க்கையைக் கண்ணோக்கி அதில நாம் நிறைவு காண்போம் என்பதோடு முனிவருக்கு முத்திப்பேறுபட்டம் அருள வேண்டுமாறு பத்தர்களிடம் கேட்டுக் கொண்டார்.

எதை உண்போம், எதை உடுப்போம் என்று ஏங்கி இருந்த பங்குமக்களுக்கு ஏர் ஏவுதலாகவும் பட்டத்திலும் பதவியிலும் பரமனை அடையலாம் என்று இருந்த இளைஞர்களுக்கு வியர்வை சிந்தி எமக்கும், பிறருக்கும், பிரசாதமாக உழைத்து இறைவனை வழிபடுவதே இன்றையதேவை என்பதைத் தந்தையின் அருளுரை உணர்த்தியது.

ன்றைய பலியில் மன்றாட்டுக்கு மையப் பொருளாக இருந்தது முனிவர் முத்திபேறு பட்டம் அடைய வேண்டும் என்பதாகும்.

இறுதியில் வணக்கத்துக்குரிய யோசேவாஸ் அடிகளாருக்குமுத்திபேறுபட்டம் அருள வேண்டும், விஷேஷ செப வழிபாட்டில் பங்கு மக்கள் அனைவரும் பங்கு பற்றினார்கள் முடிவில் முனிவருக்குரிய இன்னிசைக் கீதத்துடன் இனிதே வழிபாடுகள் முடிவடைந்தன.

தகவல்: நீற்று பிரான்சிஸ்

# திருவழிபாட்டுக்குழு - நானாட்டான்

மேற்படி வழிபாட்டுக்குழு பங்கில் இயங்கிவரும், சகல பக்திச்சபைகளுக்கும், வழிகாட்டியாக நின்று செயற்படுகின்றது. முக்கிய செயற்பாடுகளாக, பங்குத்தந்தையுடன் இணைந்து சகல மறைப்பணிகளிலும், ஆர்வமுடன் உழைக்கின்றது.

இக்குழுவில் ஆசிரியர்கள், திருமணமானவர்கள், இளைஞர் யுவதிகள், மாணவ மாணவிகள் போன்ற பலதரப்பினர்களும், இருப்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பாண்டில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்:- திரு. ச. சூசைநாயகம், உபதலைவர்:- செல்வன். ம. தேவதாஸ், செயலாளர்:- செல்வி. இ. மெரினுசோ, உபசெயலாளர்:- செல்வி. ம. சகாயசீலி, பொருளாளர்:- செல்வி. ப. ஜெயம் ஆரோக்கியநாயகி.

## இசைக்கலைஞர்களுக்கு

வயலின், வீணை, மிருதங்கம், ஓகன், கிட்டார் ஆகியவற்றைப் பயின்றவர்களின் இருபாலாரினதும் சேவை திருமறைக் கலாமன்றத்திற்கு தேவையாகவுள்ளது. மன்றத்தோடு இணைந்து சேவையாற்ற விரும்புகின்றவர்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்
223, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## நாடகம் நாட்டுக்கூத்து நூல்கள் தேவை

திருமறைக் கலாமன்றம் ஆரம்பித்துள்ள நூல் நிலையத்திற்கு நாடகம், நாட்டுக்கூத்து மற்றும் கலைகள் சம்பந்தமான நூல்கள் தேவைப்படுகின்றன. இந்நூல்களை வைத்திருப்போர் எமக்கு தந்துதவி கலைகள் சம்பந்தமான நூல்கள் பேணிப்பாதுகாக்கப்பட ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

"வெளியிட்டுப்பகுதி"
திருமறைக் கலாமன்றம்
223, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.





பிப்ர - 14 : மடத்துத்துறவி புனித சிரிலும்
ஆயர் புனித மெத்தோதியுசும்.

கிரேக்க நாட்டிலுள்ள தெசலோனிக்காவில் சிரில் பிறந்தார்; இஸ்தான் புல்லில் கல்வி கற்றுத்தேர்ந்தார். தம் சகோதரர் மெத்தோதியுசுடன் சேர்ந்து, விசுவாசத்தைப் போதிக்கும்படி மொராவியாவிற்குச் சென்றார். சகோதரர்கள் இருவரும் உரோமாபுரிக்கு அழைககப்பட்டிருந்த காலத்தில், அங்கேயே சால் 869 ஆம ஆண்டு பிப்ரவரி 14 ஆம் நாள இறந்தார். மெத்தோதயுசோ ஆயராகப் பெற்று, பன்னோனியாவுக்குச் சென்றார். அங்கு இடையறுது உழைத்து சுவிசேஷத்தைப் போதிததார். செக்கோஸ்லாவாக்கியாவில் உள்ள வெலராடி என்ற இடத்தில் 885 ஆம ஆண்டு மரித்தார்.

## ம. து. ம. ச. விவசாய உதவி

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம 1989 தை மாத முற்பகுதியில் இருந்து நெற்செய்கை மேற்கொண்டுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேற்கட்டு உரமான ரி. டீ. எம். உரத்தை 11 கமநல சேவை நிலையங்கள் மூலமாக விநியோகித்து வருகின்றது. மேற்படித் திட்டத்திற்கு தகுதியான விவசாயிகள் தத்தம் பகுதி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயபோதனாசிரியரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## விண்ணக வாழ்வின் 1-ம் ஆண்டு நினைவுநாள்



சவிரிமுத்து அன்ரன்
திருச்செல்வம்

| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 13-06-1922 | 10-02-1988 |

"ஆண்டவருக்குள் இறப்போர் பேறுபெற்றோர்: ஆம் அவர்கள் இனித்தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்கள், ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூடவரும்."

திருப்பலி 10-02-1989 காலை 5-45 புனித மரியாள் பேராலயம் திருமலை.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை. A/28

## கல்வி மனிதனுக்கு முழுமையளிக்கிறது

"ஒவ்வொரு ஆசிரியரும் தமது முன் மாதிரியின்மூலம் தமது மாணவர் நாள்தோறும் ஒரு நற்செயலைச் செய்யும்படி தூண்டலாம்" இவ்வாறு ஜனவரி 9-ஆம் திகதி சங்கனைச்சேரியிலுள்ள இருதயநாதர் ஆங்கில உயர்நிலைப்பள்ளியின் வெள்ளிவிழாவின் போது உரையாற்றிய கருதினால் அந்தோனி படியாரா குறிப்பிட்டார். முழுமையான கல்வியின் நோக்கம் மனிதனை நிறைவான மனிதனாக்குவதுதான்" என அவர் மேலும் கூறினார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த கேரள அமைச்சர் திரு. என். எம். ஜோசவ் பாடசாலையின் அதிபர் திறமையுடையவராயின் பாடசாலையின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும்" என்றார்

யூபிலி செய்தியை அளித்த பேராயர் மார் ஜோசவ் பொவதில் மாணவர் வளர்ந்து சமுதாயத்துக்குப் பயனுள்ளவர் ஆகும்படிக்கு அவர்களுக்கு ஞான வழிகாட்டுதல் அளிக்கப்படவேண்டும் என்று கூறினார்.

# மாதகல் லூர்து அன்னையின் பொன் விழா

10. 2. 89 தொடக்கம் நவநாள் ஆராதனை.
மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

18. 2. 89. மாலை 5 மணி.
திருச்சுரூப தேர்ப்பவனி
திருப்பலி, நற்கருணை ஆராதனை.

19. 2. 89. காலை 7 மணி.
திருநாட்திருப்பலி.
மேதகு யாழ் ஆயர் அவர்கள் தலைமையில்.

பங்குத்தந்தை
மாதகல்

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்